www.padippakam.com

# புதிய ஜனநாயகம்


16-31 டிசம்பர் '8

5/3

விலை ரூ.2.00

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## சந்தர்ப்பவாதக் கூட்டுகள்




வண்டி ஒன்று! பாதை ரெண்டு! போவது எங்கே?

படிப்பகம்

# தஞ்சை தியாகிகள் நினைவுத் தூண் தகர்ப்பு:

www.padippakam.com



## புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க இன்னுமொரு சதி நடவடிக்கை!

மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி மற்றும் பகத்சிங் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகளை நசுக்க தமிழக போலீசு நாயாய் அலைகிறது. சென்ற இதழ் புதிய ஜனநாயகத்தில் திருச்சி நேரு சிலை தகர்ப்பு; புரட்சிகர அமைப்புகளை ஒடுக்க போலீசு - காங்கிரசு கும்பவின் கூட்டுசதி நடவடிக்கை எப்படி நடந்தது என்பதை கூறியிருந்தோம். ம.க.இ.க. மாநில செயலர் தோழர் மருதையன் உட்பட பல தவணைகளில் இவ்வமைப்பின் 22 தோழர்களை போலீசு கைது செய்தது. இத்தோழர்களின் வீடு புகுந்து மிரட்டியும் சோதனை செய்தும் ஒரு தோழரை நடு ரோட்டில் வைத்து அடித்தும் அவமானப்படுத்தியது. தோழர்களை போலீசு நிலையத்தில் அடைத்து வைத்து பீதியூட்ட முயற்சித்து தோற்றுப் போய் கட்டம் கட்டமாக விடுவித்தது. பொய் வழக்கு போட நாய் நாடகம் நடத்தி பகுதி மக்களிடம் தனது நாய் புத்தியைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டது திருச்சி போலீசு.

அடுத்து தஞ்சை நகரத்தில் அச்சாக அதே பாணியில் இன்னொரு தாக்குதலை தொடுத்துக் கொண்டிருக்கிறது தஞ்சை போலீசு. திருச்சி- தஞ்சை போலீசின் புளுகு மூட்டைகளுக்கும் பொய் வழக்கிற்கும் அரசு உளவு அமைப்புகள் பின்னால் இருந்து இயங்குகின்றன. தஞ்சை பெரிய கோயிலை ஒட்டி ''தியாகிகள் நினைவுச் சின்னம்'' ஒன்று உள்ளது. நவம்பர் 24ந் தேதியே இதன் கழுத்தைச் சுற்றி டயரை கொளுத்தி அதை நாசப்படுத்தியதாக பத்திரிகைகளில் படத்துடன் செய்தி வந்தது. ''தீவிரவாதிகளின் கை வரிசையா?'' என்று அப்போது அனைத்து தினசரிகளும் போலீசின் அண்டப் புளுகை செய்தியாக வெளியிட்டன. அடுத்து டிசம்பர் 9ந்தேதி அதிகாலை, 15 அடி உயரமுள்ள அந்தச் சின்னம் பீடத்தோடு தகர்ந்து கிடந்தது. வழக்கம் போல-அன்றைய மாலை பத்திரிகைகள் அனைத்தும் அலறின. மாலை மலர், மாலை முரசு, தினமலர் பத்திரிகைகள் நினைவுச் சின்னம் தகர்ப்பு செய்தியை கண்- காது - மூக்கு வைத்து வெளியிட்டன. தஞ்சை நகர போலீசு மோப்பம் பிடிக்க ஆரம்பித்து புரட்சிகர அமைப்புகளை மட்டும் கவ்வி பிடித்தது. யானை வரும் முன்னே மணி ஓசை வரும் பின்னே என்பது போல், நாய் வரும் முன்னே போலீசு வரும் பின்னே என்பதாக தஞ்சை நகரம் அல்லோகலப்பட்டது. 9ந் தேதி காலை 7.30 மணியளவில், ம.க.இ.க. மாநில பொருளாளர் தோழர் காளியப்பனை, தஞ்சை நகரில் அவர் வீட்டில் வைத்து போலீசுக்கைது செய்தது. அன்று மதியமே, தஞ்சை கீழவாசலில் ம.க.இ.க. தோழர் அருள் வீட்டிற்கு நாயை துரத்திக் கொண்டு ஓடியது, போலீசு. தோழரையும் அமைப்புடன் சம்மந்தப்படாத அவரது இரண்டு சகோதரர்களையும் கைது செய்தது போலீசு. கள்ளச் சாராய பிரச்சனையில் உள்ளூர் போலீசுக்கு எதிராக போராடியவர் தோழர் அருள். பேடித்தனமாக இப்படி பழிதீர்த்தது போலீசு. பிறகு தஞ்சை கரந்தையில் நெடுமாறன் கட்சியினர் உட்பட 4 பேரை போலீசு கைது செய்தது. ம.க.இ.க. மாநில செயலர் தோழர் மருதையன் இருப்பதை சந்தேகப்பட்டு அவரது வயதான தாயார் தங்கியிருக்கும் வீட்டைச் சூறையாடியது போலீசு. வெடிகுண்டு கண்டறியும் கருவி கொண்டு (Metal detector) சோதனை நடத்தியது. வீட்டுச் சுவரை நக்கி பார்க்காதது தான் பாக்கி! தோழர் அருள் வீடும் போலீசால் சூறையாடப்பட்டது.

தோழர் மருதையன் உட்பட பல தோழர்களை கைது செய்ய இரவும் பகலும் அலைந்து கொண்டிருக்கிறது போலீசு. தோழர்கள் வீடு, அமைப்புக்கு ஆதரவான வழக்கறிஞர்கள் வீடு என அனைத்து இடங்களிலும் போலீசு வண்டியுடன் நிரந்தரமாக தங்கியிருந்து கண்காணிக்கிறது. ''தியாகிகள் நினைவு சின்ன தகர்ப்புக்கும், ம.க.இ.க.வுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை'' என்று ம.க.இ.க. கொடுத்த பத்திரிகை அறிக்கையை, தினமணி தவிர வேற எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை.

ஆனால் போலீசு நாயைத் தள்ளிக் கொண்டு தோழர் அருள் வீட்டில் நுழைந்த செய்தியை, நாய் அருளை கவ்விப் பிடித்தது என்று போலீசின் பொய் செய்தியை அப்படியே வெளியிட்டன. கைது செய்த தோழர்களை போலீசார் 12ந் தேதி வரை கோர்ட்டில் ஒப்படைக்கவோ, வழக்கு பதிவு செய்யவோ இல்லை. வெறுமனே அடைத்து வைத்து மிரட்டிப் பணிய வைக்க முயற்சித்தனர். ஆனால் தமிழகத்தின் பல பகுதிகளிலும், திருச்சி தஞ்சை உட்பட போலீசின் பொய் பிரச்சாரத்தை தோழர்கள் தோலுரித்து வருகிறார்கள். நமது பிரச்சாரத்தை மக்கள் அக்கறையுடன் கேட்கிறார்கள்; போலீசு பீதியூட்டலுக்கு மத்தியிலும் கடைசி வரை கவனிக்கிறார்கள்; அனுதாபப் படுகிறார்கள்; ஆதரவு தருகிறார்கள். குறிப்பாக தாராளமாக நிதியுதவி அளித்து, ''பிரச்சாரத்தை நிறைய இடங்களில் செய்யுங்கள்'' என்று அன்போடு சொல்கிறார்கள்.

போலீசின் பொய் வழக்குகளும், அவதூறும், அடக்கு முறைகளும், சித்திரவதைகளும் புரட்சிகர அமைப்புகளுக்குப் புதிதல்ல! புரட்சிகர அமைப்புகளை கொச்சைப்படுத்த போலீசு புலிகள் இட்டுகட்டும் கதைகளுக்கு கழிப்பிடச் சுவர்களில் விடலைகள் எழுதும் 'கக்கூஸ் கவிதை' களுக்கு தரும் மதிப்பைத்தான் தருகிறார்கள் மக்கள்!

அன்று ஜெர்மனி பாராளுமன்ற கட்டிடத்துக்கு தாமே தீ வைத்துவிட்டு, பாசிச எதிர்ப்பு போர்வீரன் தோழர் டிமிட்ரோவ் மீது பழி சுமத்தி கூண்டிலேற்றியது மனித குல விரோத கோயாபல்ஸ் - ஹிட்லர் கூட்டம். சதிகாரர்களின் பொய் முகங்களை அவர்களது குகையிலேயே கிழித்தெறிந்தார், மாவீரன் டிமிட்ரோவ். அந்த வீரர் வழி வந்தவை தான் மக்கள் கலை இலக்கியக் கழகமும் அதன் தோழமை அமைப்புகளும் என்பதை அதன் செயல் வீரர்கள் நிச்சயம் நிரூபித்துக் காட்டுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

3

16-31 டிசம்பர் '89

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

## பஞ்சாப் - காஷ்மீர் நெருக்கடி:

# புதிய ஆட்சியாளர்களிடமும் தீர்வுகிடையாது

காஷ்மீர் விடுதலை முன்னணியினரால் பிணையக் கைதியாக கடத்தி வைக்கப்பட்டிருந்த டாக்டர் ருபையா சையிது, மத்திய உள்துறை மந்திரி மஃப்டி மொகம்மது சையதுவின் இளைய மகள், இழுபறியும் பதட்டமும் நிறைந்த 120 மணி நேரத்துக்குப் பின் விடுவிக்கப்பட்டார். அதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்பே கா.வி.மு. கடத்தல்காரர்களின் கோரிக்கைகளை ஏற்று தடுப்புக்காவல் கைதிகளாக இருந்த அவர்களது ஐந்து சகபாடிகள் விடுவிக்கப்பட்டனர்.

விவகாரம் சுமுகமாக முடிந்தது என்று ருபையாவின் விடுதலைக்காக புதிய ஆட்சியாளர்கள் மகிழ்ந்து போகும் முன்னரே அதிர்ச்சியூட்டும் வேறுசில செய்திகளும் காஷ்மீரில் இருந்து வருகின்றன. தடுப்புக் காவல் கைதிகளின் விடுதலைச் செய்தி பரவியதும் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் விழாக் கோலம் பூண்டது. தீபாவளி இரவைப் போல பட்டாசு வெடித்து, தீபமேற்றி ஸ்ரீநகர் மற்றும் பல இடங்களில் காஷ்மீர் மக்கள் கொண்டாடினர். "இந்திய இராணுவமே வெளியேறு!" "காஷ்மீருக்குச் சுதந்திரம் வேண்டும்" என்று முழங்கிக் கொண்டு தன்னெழுச்சியாக மக்கள் சாரிசாரியாக ஸ்ரீநகர் தெருக்களில் ஊர்வலங்கள் பல நடத்தினர். பெண்கள் வெற்றிப் பாடல்களைப் பாடி ஊர்வலங்களில் கலந்து கொண்டனர்.

கடத்தல் - பேச்சுவார்த்தை - இழுபறி என்றிருந்த அந்த ஆறு நாட்களும் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் பிரிவினை கோருவோரின் சொல்லுக்கு ஆடியது என்று செய்திகள் கூறுகின்றன. தமது போராளிகள் நிச்சயம் விடுதலையாவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுக்காகப் பல வரவேற்பு வளைவுகள் எழுப்பினர். கா.வி.மு., பாகிஸ்தான் மற்றும் பாக். கட்டுப்பாட்டில் உள்ள ஆசாத் காஷ்மீர் ஆகிய மூன்று கொடிகளை ஏற்றி இந்திய எதிர்ப்பு முழக்கமிட்டனர். 'அரசியலுக்கே சம்பந்தமில்லாத ஒரு அப்பாவிப் பெண்ணுக்கு நேர்ந்துள்ள ஆபத்து பற்றியோ, அவரது குடும்பத்துக்கு ஏற்பட்ட பதட்டம், துயரம் பற்றியோ அனுதாபப்படும் இதயம் ஒன்றுகூடக் கிடையாது. நிர்வாகம் செயலிழந்து பதுமையாகிப் பார்த்துக் கொண்டிருந்து' என்று அதிர்ச்சியோடு 'இந்து' நாளேடு எழுதுகிறது.

"காஷ்மீர் நிலைமை பஞ்சாபைவிட மோசமாக உள்ளது. அங்கு சட்டம் - ஒழுங்கு முற்றாக நிலைகுலைந்து போய்விட்டது. இரண்டு ஆண்டுகளாகவே அங்கு கொந்தளிப்பான நிலைமை நிலவுகிறது. உடனடியான பரிகாரம் கண்டாக வேண்டும்" என்று உள்துறை மந்திரி அறிக்கை வெளியிட்டுள்ளார். "காஷ்மீரில் பரூக் அப்துல்லா ஆட்சி செயலிழந்து போயுள்ளது. பிரிவினை கோரும் தீவிரவாதிகள் மற்றும் மத வெறியர்களின் ஆதிக்கமே நிலவுகிறது" என்று ஓராண்டுக்கு முன்பே பத்திரிக்கைகளும், எதிர்க் கட்சிகளும் எச்சரித்தன.

தேசிய முன்னணியின் புதிய அரசுக்கு சவாலாக விளங்கும், அதுவும் முன்னுரிமை தந்து தீர்க்கப் போவதாக அணுகும் இரண்டு பிரச்சினைகள் பஞ்சாப் மற்றும் காஷ்மீர். இதற்காக தனி மந்திரிசபைக் கமிட்டி அமைத்துள்ளது. பஞ்சாப் பிரச்சினையை விவாதிப்பதற்காக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறது. சீக்கியர்களுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்திரா கொலை - சதி வழக்கை விலக்கிக் கொண்டும் தடுப்புக் காவலை நீக்கியும் பல சீக்கியத் தலைவர்கலை விடுதலை செய்துள்ளது. பதவியேற்றதும் புதிய பிரதமர் வி.பி.சிங், துணைப் பிரதமர் தேவிலால் ஆகியோர் மற்றும் இரு மந்திரிகளுடன் பொற்கோவிலுக்குப் போய் பிரார்த்தனை செய்துவிட்டு பாதுகாப்புப் படையின்றி சீக்கிய மக்களிடையே கலந்து பழகினர். அரசு பயங்கரவாதம், சீக்கிய மதவெறி பயங்கரவாதம் இரண்டுக்கும் பல உயிர்களைப் பலி கொடுத்த பஞ்சாபியர்கள் புதிய நம்பிக்கை பெற்றிருப்பதாகத் தோன்றியது. பஞ்சாபில் அரசு பயங்கரவாதத்துக்குத் தலைமையேற்ற கவர்னர் சித்தார்த்த சங்கர் ரே பதவி விலகி ஓடும்படி செய்தது. முன்னாள் விமானப்படை தளபதியும், அகாலி ஆதரவாளருமான அர்ஜன் சிங்குக்கு டில்லி துணைக் கவர்னர் பதவி அளித்துள்ளனர். அகாலி தளத் தீவிரவாதப் பிரிவு தலைவர் சிம்ரான்ஜித் சிங் மானுக்கு மத்திய மந்திரி பதவி தருவதாக இழுக்கின்றனர்.

இவையெல்லாம் பஞ்சாப் பிரச்சினையைப் புதிய அரசு தீர்த்துவிடும் என்கிற வீண் பிரமையை உருவாக்கும் நடவடிக்கைகள் தான். பஞ்சாபில் உள்ள 13இல் 10 நாடாளுமன்ற இடங்களைப் பிடித்து சீக்கியரிடையே மிகவும் செல்வாக்குள்ள பிரிவாக நிரூபித்துக் கொண்டுள்ளது, சீக்கிய மதவெறியர்களின் சட்டபூர்வ பிரதிநிதியாகக் கருதப்படும் சிம்ரான்ஜித் சிங் மான் தலைமையிலான அகாலி தளம். அதன் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பஞ்சாபோடு அரியானா, ராஜஸ்தான், இமாசல பிரதேசத்தின் சில பகுதிகளை இணைத்து சுயாட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும். தகவல் தொடர்பு, நாணயம், வெளிவிவகாரம், இராணுவம் ஆகியவை தவிர அனைத்து விவகாரங்களிலும் தனியான அரசியல் நிர்ணய சட்டம் வகுத்து ஆண்டு கொள்ள உரிமை வேண்டும் என்று கோருகிறது.

தேசிய முன்னணி மட்டுமல்ல; டில்லியில் ஆட்சி அமைக்கும் யாருமே இந்தக் கோரிக்கைகளை ஏற்க மாட்டார்கள். குறிப்பாக, தேசிய முன்னணி ஆட்சியின் உயிர்நாடியைத் தம் கைகளில் பிடித்துள்ள இந்து மதவெறி பாரதீய ஜனதா ஒரு போதும் இதற்கு சம்மதிக்காது. அது மட்டுமல்ல; மான் பிரிவு அகாலிதளத்தின் பின் பலமாக உள்ள சீக்கிய தீவிரவாத மாணவர் கூட்டமைப்பும், தாம்தாமி தக்சல் அமைப்புகளான அகில இந்திய சீக்கிய அமைப்பும் 'காலிஸ்தான்' என்ற தனி நாடு தான் தமது லட்சியம் என்று மீண்டும் பிரகடனப் படுத்தியுள்ளன. மான் பிரிவு அகாலி தளத்தின் மாநில சுயாட்சி கூட காலிஸ்

படிப்பகம்

www.padippakam.com

**(தலையங்கம் தொடர்ச்சி)**

தானை அடைவதற்கான ஒரு உந்துவிசை இடைக்கால ஏற்பாடாகத் தான் உள்ளது

பஞ்சாப் பிரச்சினையையாவது தீர்க்க முயலுவதாகக் காட்டிக் கொள்ள முடியும். ஏனெனில் ஆட்சியாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான எதிர்த்தரப்பு என்கிற முறையில் பல்வேறு பிரிவு அகாலிதள அமைப்புகள் உள்ளன.

ஆனால் காஷ்மீர் விவகாரத்தில் அப்படிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்த்தரப்பினர் எவருமே கிடையாது. எதிர்த்தரப்பு - அதிருப்தி கருத்துக்களுக்கு வடிகாலாக அமைந்து இயங்கிவந்தது ஃபருக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி. அதுவும் ராஜீவ் கும்பலுடன் அரசியல் விபச்சார ஒப்பந்தம் போட்டுக் கொண்டு கூட்டணி அரசு அமைத்துக் கொண்டுள்ளது.

பஞ்சாப் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள் இரண்டுமே இந்திரா - ராஜீவ் கும்பல் அரசியல் ஆதாயம் கருதித் தூண்டிவிட்டு வளர்த்தவை என்று மற்ற அனைத்துக் கட்சிகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன. பஞ்சாப் பிரச்சினைக்காவது இந்திரா - ராஜீவ் கும்பல் ஏற்படுத்திய 'ரணத்தை ஆற்றுவது' மற்றும் அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண முடியும் என்று ஆளும்கட்சிகள் கூறிவருகின்றன. ஆனால் காஷ்மீர் பிரச்சினைக்கு அப்படிப்பட்டதொரு தீர்வு கூட அவர்களிடம் கிடையாது.

இவ்விரு விவகாரங்களையும் தீர்க்க முடியாத போது இப்போதைய ஆளும் கட்சிகளும் இந்திரா - ராஜீவ் கும்பல் எழுப்பிய அதே கூச்சலைத் தான் போட முடியும். அதாவது, நாட்டைப் பிளவுபடுத்த எல்லைக்கு அப்பால் பாகிஸ்தான் சதிகாரர்கள் - தீவிரவாதிகளுக்கு நிதி, பயிற்சி, ஆயுதம் வழங்கி பயங்கரவாதச் செயல்கள் செய்யும்படி ஏவிவிடுகிறது என்றே அதே அடிப்படையைக் காட்டுவார்கள். போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் நிலைப்பாடும் அதுதான். எனவே எதிரெதிர் முகாம்களில் இருந்தபோதும் போலிக் கம்யூனிஸ்டுகளும் பாரதீய ஜனதாவும் "பஞ்சாப் - காஷ்மீர் பிரிவினை - தீவிரவாதிகளை ஒடுக்கும்படி ஒரே குரலில் தேசிய முன்னணியை நெருக்குவார்கள். ராஜீவ் ஆட்சிக்கு அடிப்படையில் மாறுபட்ட ஒரு தீர்வு இவர்களில் யாருக்குமே கிடையாது.

எனவே அரச பயங்கரவாதத்தை மீண்டும் ஏவி விடுவார்கள். காஷ்மீரில் ஏற்கனவே மாநிலம் தழுவிய ஊரடங்கு போட்டு இராணுவத் தாக்குதலைத் தொடங்கி விட்டார்கள். இதற்கு எதிர்விளைவாக பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகள் முற்றவே செய்யும்.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு நீண்ட கால அடிப்படை இருக்கிறது. தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவது சாதி, மத ரீதியாக மக்களைப் பிரித்தாளுவது என்று ஆங்கிலேயே ஏகாதிபத்தியம் உருவாக்கிய அரசியல் அமைப்பு மற்றும் கொள்கையை இன்று வரையிலான ஆட்சியாளர்கள் கட்டிக்காப்பது தான் காரணம்.

1947 அதிகார மாற்றம் நடந்த உடனே காஷ்மீர் மீது படை கொண்டு பாய்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் கூறு போட்டுக் கொண்டன. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை இரு நாடுகளுமே எப்போதும் மதிக்கவில்லை. காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதா, இந்தியாவுடன் இணைவதா, தனித்து இருப்பதா என்பதைத் தீர்மானிக்கும் கருத்துக் கணிப்பு - தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி வந்த சேக் அப்துல்லா கும்பல் பரம்பரை பதவி கிடைத்ததும் இந்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு துரோகம் செய்துவிட்டது.

இன்று, காஷ்மீரில் மூன்று சக்திகள் உள்ளன. இந்திய அரசுடன் சமரசம் செய்து கொண்டு குறுகிய சுயநல ஆதாயம் தேடும் "மதச்சார்பற்ற - தேசிய வாதிகள்" என்று கூறிக் கொள்ளும் ஃபருக், மஃப்டி, குரேஷி போன்றவர்கள்; காஷ்மீரைப் பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டும் என்று போராடும் முஸ்லீம் மத வெறியர்கள்; காஷ்மீர் தனிநாடு அல்லது சுயநிர்ணய உரிமைக்காக போராடும் காஷ்மீர் விடுதலை முன்னணி. இவற்றிலே இந்திய இராணுவ 'ஆக்கிரமிப்பு' மற்றும் அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக கா.வி.மு.வானது பாக். ஆதரவு முஸ்லீம் மதவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாகத் தெரிகிறது. காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை நியாயமானது; ஆதரிக்க வேண்டியது. ஆனால் கா.வி.மு.வானது முஸ்லீம் மதவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது தேசிய இனப் பிரச்சினையை மதரீதியிலானதாக சீரழிந்து தேசிய இனவெறி, மத வெறி மற்றும் பாசிச பயங்கரவாதத்துக்குள்ளும் தள்ளிவிடும் அபாயம் உள்ளது.

காஷ்மீர் பிரச்சினையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது பஞ்சாப் விவகாரம். பஞ்சாபில் வாழும் இந்துக்களும் சீக்கியர்களும் சேர்ந்ததுதான் பஞ்சாபிய தேசிய இனம். ஆனால் சீக்கியர்களுக்கான தனிநாடாக காலிஸ்தானம் மற்றும் சர்வதேச சீக்கிய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காக சீக்கிய மதவெறி தீவிரவாதிகள் போராடுகிறார்கள். ஒருபுறம் மதச்சார்பின்மை பற்றி சவடால் அடித்துக் கொண்டே இந்து - முஸ்லீம் - சீக்கிய மதங்களை எதிரெதிராக நிறுத்தி மோதவிட்டு, மதவெறி தூபமிட்டு அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வது நாட்டின் முக்கிய ஓட்டுக் கட்சிகளின் வழிமுறையாக உள்ளது. அந்த அடிப்படையில் நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரையினால் தூண்டி விடப்பட்ட சீக்கிய மதவெறி இன்று பெரும் பூதமாக வளர்ந்து விட்டது. கூடவே, அதன் பொருளாதாரக் கொள்கையினால் உருவாக்கி வளர்க்கப்பட்ட நவீன முதலாளித்துவ நிலப்பிரபுக்கள் சீக்கிய மதவெறிக்கான சமூக அடிப்படையாகி விட்டார்கள். கூடுதலான அதிகாரப் பகிர்வு என்ற சலுகையுடன் அவர்கள் அடங்கிவிட மாட்டார்கள்.

பல்வேறு தேசிய இனங்கள், சாதி - மதப் பரிவுகள் உள்ள இந்தியா போன்றதொரு நாட்டில் - அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, பிற்போக்கு சாதிய அமைப்புகளை துடைத்தெறிவது, மத நம்பிக்கைகளைத் தனிநபர் விவகாரமாக்கி அரசியல் - பொருளாதார வாழ்வில் இருந்து துண்டித்து விடுவது ஆகியவை மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயக அரசு தான் இந்தத் தீர்வுகளை முன்வைத்து அமுலாக்க முடியும்.





படிப்பகம்

www.padippakam.com



# அடிமைத்தனத்தின் மறுபெயர் திராவிடக் கட்சிகள்



எட்டி உதைக்கும் காலை நக்குவது. இட்ட பிச்சைக்குக் குப்புற விழுந்து கும்பிடுவது - இதுதான் திராவிடக் கட்சிகளின் சுயமரியாதை, பகுத்தறிவு அரசியல். மீண்டும் மீண்டும் இதை நிரூபிக்கிறார்கள்.

மத்தியிலே யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி! ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு மாறி மாறி அடிமைச் சேவகம் செய்கிறார்கள். ஒருவருக்கு எதிராக ஒருவர் கோல்மூட்டி ஊழல் பட்டியல் தந்து, ஆட்சியைக் கலைக்கும்படி மன்றாடுகிறார்கள். "இதோ வருகிறார் மத்திய மந்திரி; சி.பி.ஐ.சோதனை, விசாரணை துவங்கி விட்டது, முடிவு நெருங்கிவிட்டது!" என்று மத்திய எஜமானரின் பின்னே நின்று ஒருவரை ஒருவர் மிரட்டுகிறார்கள். அதேசமயம் அப்படிச் செய்வதாகவும், தமிழரின் உரிமையை அடகு வைத்து விட்டதாகவும், தமிழரின் மானமே போய் விட்டதாகவும், ஒருவர் மீது ஒருவர் சாடுகின்றனர். இதுதான் திராவிடக் கட்சிகளின் அரசியல்.

கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறனுக்கு மத்திய மந்திரி பதவி கிடைத்து விட்டது. "மாறனுக்கு மத்திய அமைச்சரவையில் 'காபினட் தகுதியில் இடம் கொடுத்ததற்காக ஐந்து கோடித் தமிழர்களும், வி.பி.சிங்குக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். அதை விமர்சிப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெரிய துரோகம்''. "தமிழர்களின் உரிமை - உணர்வுக்கு மதிப்பளித்து பதவி கொடுத்திருக்கிறார்கள். கழகத்திற்கு மத்திய மந்திரி பதவி அளிக்காவிட்டால் பாதிப்பு - இழப்பு தி.மு.க.வுக்கு அல்ல — மாறாக, தமிழ் மக்களுக்கு - தமிழ் நாட்டுக்குத்தான்!" தி.மு.க.க்கள் பிரச்சாரம் செய்கின்றன.

பிராந்தியத்துக்கு, வகுப்புக்கு, சாதிக்கு என்று மந்திரி பதவிகளைப் பங்கு போடுவது யாரும் அறியாத இரகசியமா? இந்த அடிப்படையில், இந்தப் பிழைப்புவாதிகள் பதவி பெற, தமிழக மக்கள் ஏன் நன்றி செலுத்தக் கடமைப்பட வேண்டும்! நன்றி விசுவாசம் பாராட்டும் அதே சமயம் தி.மு.க.க்கள் எப்படிப் பீற்றிக் கொள்கிறார்கள் தெரியுமா? "இந்திய நாட்டின் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கி விட்டு தமிழகம் திரும்பும் கலைஞர் வாழ்க!" "புதிய பிரதமரை உருவாக்கி விட்டுத் திரும்பும் தலைவர் கலைஞர் வாழ்க!" என்ன கேலிக்கூத்து! இவர் பிரதமரை உருவாக்குகிறார்! பிரதமர் இவரது மருமகனுக்கு மந்திரி பதவி தருகிறார்! பிறகெதற்கு நன்றி?

பதவிப் பிச்சை கிடைத்ததும் வி.பி.சிங்கின் அரசபரம்பரை, தேவிலாலின் 'மகிமை'கள். பற்றி வரலாறு எழுதுகிறார்கள். 'ஜாட்' சாதித் தலைவராகத் திரியும் தேவிலால் "ஜாட் இனத்தவரின் தலைவராக ஏற்கப்பட்டவர்" என்று சித்தரிக்கின்றன பகுத்தறிவுகள். நிலத்தைப் பறித்துக் கொண்டு விவசாயிகளை விரட்டும் கொடுங்கோல் மிராசுதாரை, "விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்" என்கிறார்கள். ஓட்டுச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்களை விரட்டும் ஜனநாயகவாதி தேவிலாலை, "தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டிப் போராடியவர்" என்கிறது முரசொலி

ராஜீவ் கும்பலின் பாதந்தாங்கிய ஜெயலலிதா கட்சி, தி.மு.க.க்களைப் பார்த்து, இந்தி வெறியர்களுக்கு விலைபோய், மருமகனுக்கு பதவி வாங்கியதாகச் சாடுகிறது. அதே சமயம் ஹெக்டே, சோ மூலமாக தேசிய முன்னணியில் சேர முண்டிக் கொண்டு நிற்கிறது. தி.மு.க ஆட்சியைக் கலைத்து மறுதேர்தல் நடத்தி தனக்குப் பதவி கிடைத்தால் போதும் என்று பேரம் பேசி 26 எம்.பி. தொகுதிகளைத் தாரை வார்த்தவர் தமிழர் மானம் பற்றி ஆவேசம் கொள்கிறார்.

கழகங்களின் தலைமை இப்படி அடிமைச் சேவகம் செய்து ஆதாயம் அடைவதையே அரசியல் திறமையாகப் பாடும்போது மற்ற திராவிடர்கள் எல்லாம் மானம் மரியாதையோடு இருக்க முடியுமா? இழிவுகளைத் தாங்கிக் கொண்டு எடுபிடிகளாகவே அரசியல் நடத்துகிறார்கள், அடுத்த மட்டத் தலைவர்கள்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ, எம்.பி.க்களைக் கூட்டி தானே முடிவு செய்த புதிய நிர்வாகிகள் பட்டியலை சர்வாதிகார முறையில் ஜெயலலிதா அறிவித்தாராம். அவ்வளவு பேரும் வாய் பொத்தி தலை குனிந்து 'மகாராணி'யின் முடிவை ஏற்றார்களாம். ஜெயலலிதா சொல்லைத் தட்டாததோடு அவரே எதிர்பாராத அளவு பணிவுடன் நடப்பவர்களுக்கே பதவி! நான் போடும் பிச்சைதான் உங்களுக்குப் பதவி என்ற எகத்தாளம்!

தனக்குத் தவிர வேறு யாருக்குமே கட்சியில் அதிகாரமோ, மக்களிடம் செல்வாக்கோ கிடையாது என்று நிரூபிக்க அத்தனை பேரையும் பலமுறை அவமானப்படுத்துவது ஜெயலலிதாவின் அணுகுமுறையாம். அதை நிரூபிப்பதற்காக தன்னைத் தவிர வேறு யாருமே மேடையேறக் கூடாது என்று கடந்த தேர்தலில் தடை விதித்தாராம். அதை மீறியதற்காக திருநாவுக்கரசு மீது விசாரணை அவரது எடுபிடிகளின் பதவிப் பறிப்பு. சாத்தூர் ராமச்சந்திரன் மீது திராவகத்தை ஊற்றி கொல்ல முயன்ற மாநில அரசியல் ரௌடி தாமரைக்கனி மீதான வழக்கை விலக்கிக் கொள்ளும்படி மிரட்டியிருக்கிறார், ஜெயலலிதா. ஆட்சிக்கு வரும் முன்பே, கட்சிப் பணம் பலகோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டுள்ளார் என்று தெரிந்தும் எதிர்காலப் பிழைப்புவாத அரசியலுக்கு ஏற்றவர் என்று அந்த எடுபிடிகள் ஜெயலலிதா காலில் விழுந்து கிடக்கிறார்கள்.

இதே மாதிரியான சர்வாதிகாரம், அவமானப்படுத்தும் செயல்களை நாசுக்காக செய்பவர்தான் மு.க. ஆனால் ஜனநாயகவாதியாகவும், பண்பாளராகவும் பாசாங்கு செய்கிறார். கட்சிக்குள்ளே இரகசிய சதிகள் செய்து தனது விசுவாசிகள் மட்டுமே வெற்றி பெறும் வகையிலே தேர்தல் நடத்தி உட்கட்சி ஜனநாயகம் பற்றிப் பீற்றிக் கொள்கிறார் என்பது அரசியல் வட்டாரத்தில் அனைவரும் அறிந்தது தான்.

இப்போது தேர்தல் தோல்விக்கு மற்ற மந்திரிகள் மீது பழி போட்டு இலாக்காக்களை மாற்றினார். பழிவாங்கப்பட்டதாகக் கருதி ராஜினாமா செய்த ஆற்காடு வீரசாமி டெல்லியில் இருந்து திரும்பிய மு.க.வைப் பார்க்கப் போனாராம். கொத்தடிமையைப்போல கைகட்டிக் கொண்டு நின்றும், சிறிதும் மதியாமல் மூஞ்சியை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு அவமானப்படுத்தினாராம். அதையும் தாங்கிக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார் ஆர்க்காட்டார்.

இவையெல்லாம் படித்து ரசிப்பதற்குரிய செய்திகளாக எழுதி வியாபாரம் நடத்துகின்றன பத்திரிக்கைகள். ரசித்து விட்டு, இவை அரசியல் கட்சிகளுக்குள்ளே நடக்கும் சமாச்சாரம், மத்திய - மாநிலக் கட்சிகளுக்கிடையே நடக்கும் விவகாரம் என்று ஒதுங்கி விடுவது சரியா? இல்லை. கழகங்களுக்குள் எடுபிடிகளாய் இருப்பவர்கள் தான் வெளியே பொறுக்கி அரசியல் நடத்தி மக்களிடம் அராஜக - அடாவடித்தனங்கள் செய்கிறார்கள். மக்களின் நலன்களைத்தான் மத்திய ஆட்சியாளர்களிடம் அடகு வைக்கிறார்கள். எனவே இந்த கழகங்களின் அரசியல் அசிங்கங்களைக் கண்டு ஒதுங்கி விடக்கூடாது! ஒழித்துக் கட்ட வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

மறப்போம்! மன்னிப்போம் என்கிற திராவிட பிழைப்புவாதக் கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கொள்கை இப்போது தேசிய கொள்கையாகி விட்டது. இன்றைய புதிய ஆட்சியாளர்கள் இதே பாணியில் ''யாரையும் பழிவாங்க மாட்டோம்'' என்று அறிவித்திருக்கிறார்கள்.

தேர்தலின் போது எதிர்க்கட்சியினராக இருந்த இவர்கள், பாசிச ராஜீவின் லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளை அடுக்கடுக்காக குற்றம் சாட்டினர். முச்சந்தி எங்கும் பீரங்கி 'கட் அவுட்'களை நிறுத்தி ''போஃபார்ஸ் கொள்ளையருக்கா உங்கள் ஓட்டு?'' என்று பிரச்சாரம் செய்தனர். ''அரசு எந்திரத்தையே தனது கேடான நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் ஜனநாயக விரோதிக்குப் பாடம் புகட்ட எங்களுக்கே வாக்களியுங்கள்!'' என்றனர். சுருக்கமாகச் சொன்னால், கொள்ளைக்காரன், கொலைகாரன், ஜனநாயக விரோதி, அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தும் சர்வாதிகாரி என்று ராஜீவையும் அவரது விசுவாச கும்பலையும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளாக சித்தரித்தனர். ஆனால் இப்போது ஆட்சி பீடம் ஏறியதும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு யாரையும் பழிவாங்க மாட்டோம் என்று பச்சோந்தித்தனமாக அறிவிக்கிறார்கள்.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ராஜீவ் செய்தது சாதாரண குற்றங்களோ, மறந்து மன்னித்து விடக்கூடிய தவறுகளோ அல்ல. நாடும் மக்களும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாத பல அரசியல் பொருளாதாரக் கிரிமினல் குற்றங்களைச் செய்துள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். தனது கிரிமினல் குற்றங்களை மூடி மறைக்கவும், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், அரசு எந்திரத்தையே - அதிகார வர்க்கம், போலீசு, நீதித் துறை, உளவுத்துறை உள்ளிட்ட அரசு நிறுவனங்களையே கேடாகப் பயன்படுத்தி கொச்சைப் படுத்திவிட்டது. அதைவிட அரசு எந்திரமே ஆளுங்கும்பலின் விசுவாசப் படையாக மாறி ஆட்டம் போட்டது.

### பாசிச ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்கள்

★ பாசிச இந்திராவின் கொலையைத் தொடர்ந்து டெல்லியிலும் வட இந்திய நகரங்களிலும் 5,000க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கியர்களைக் கொன்று ஆட்சிக்கு வந்த பாசிச ராஜீவ் கும்பல், அக்கொலைக் குற்றவாளிகளுக்கு மந்திரி பதவிகள் அளித்துப் பாராட்டியது. பழிவாங்கும் வெறியோடு, இந்திரா கொலைக்கு அறவே சம்பந்தமில்லாத நிரபராதி கேஹார்சிங்கை தூக்கிலிட்டு சிம்ரான்ஜித்மான், அதிந்தர் பால்சிங் ஆகியோர் மீது சதிக்குற்றம் சாட்டி, வழக்கே இல்லாமல் தனிமைக் கொட்டடியில் அடைத்து சித்திரவதை செய்தது.

★ 3 லட்சம் மக்களை நிரந்தர நோயாளிகளாக்கி 5,000 பேரைக் காவு கொண்ட போபால் விஷவாயு 'விபத்து'க்குக் காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் ரகசிய பேரங்கள் நடத்திக் குற்றவாளிகளை பாசிச ராஜீவ் கும்பல் பாதுகாத்து தப்புவிக்கச் செய்தது. அதேசமயம் நட்டஈடு கோரி போராடிய மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

★ சீக்கிய சமூகத்தையே பழிவாங்கும் வெறியோடு பஞ்சாபில் அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட்டு உளவுப்படை ''ரா'' மூலம் பல சதிகளையும், கொலைகளையும் அரங்கேற்றி, பழியை சீக்கியத் தீவிரவாதிகள் மீது சுமத்தி பஞ்சாபையே ரத்தக்களறியாக்கியது. பஞ்சாபிலும் காஷ்மீரிலும் கிரிமினல் கேடிகளையும் போலீசு ரௌடிகளையும் கொண்ட ரகசிய கொலைப் படைகளைக் கட்டி மாதத்துக்கு இவ்வளவு பேரைக் கொல்ல வேண்டும் என்று இலக்கு வைத்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்றொழித்தது.

★ திரிபுரா இனவெறி தீவிரவாதிகளுடன் கள்ளக்கூட்டு சேர்ந்தும், அசாம் போடாலாந்து கிளர்ச்சியை சீர்குலைத்தும் உளவுபடை ''ரா'' மூலம் சதிகளையும் இனப்படுகொலைகளையும் தனது குறுகிய அரசியல் ஆதாயத்துக்காக கட்டவிழ்த்து விட்டது. தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள இந்து - முஸ்லிம் மதவெறியர்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து மதவெறியைக் கிளறிவிட்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலியிட்டது. இதேபோல குஜராத்திலும், ஆந்திராவிலும் இடஒதுக்கீடு சாதிக் கலவரங்களைத் திட்டமிட்டே தூண்டியது.

★ போஃபர்ஸ் ஊழல் வெளியானதும் அதை மூடி மறைப்பதற்காக எண்ணற்ற சதி வேலைகளை — ஸ்வீடன் அரசுடன் உடன்பாடு செய்து கொண்டு ஊழலை அமுக்கியதோடு பொய்யான ஆதாரங்கள் - வதந்திகளை அயோக்கியத்தனமாக பரப்பியது. பாராளுமன்றத்தில் தனது மிருக பலத்தை வைத்து எதிர்க்கட்சியினரின் ஊழல் குற்றச்சாட்டுகளை விவாதிக்கவே விடாமல் ரௌடித்தனமாக நடந்து கொண்டது. ஊழலில் ஊறித் திளைக்கும் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்கான ''லோக்பால்'' மசோதாவை காலாவதியாக்கியதோடு, ராஜீவ் கும்பலின் ஊழலை அம்பலப்படுத்திய பத்திரிகைகளின் குரல்வளையை நெறிக்க அவதூறு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தும், பத்திரிக்கை காகிதத்தை அநியாயமாக விலையேற்றியும் அடக்கத் துடித்தது. இதுதவிர, அவசரநிலை பிறப்பிக்கும் 59-வது சட்டத் திருத்தம், பயங்கரவாத தடைச் சட்டம், கலவரப் பகுதித் தடைச்சட்டம் முதலான பல கருப்புச் சட்டங்களைக் கொண்டுவந்து தன்னை ஆயுதபாணியாக்கிக் கொண்டது பாசிச கும்பல்.

★ போஃபார்ஸ் ஊழலையும் ராஜீவின் அதிகார முறைகேடுகளையும் அம்பலப்படுத்திய குற்றத்திற்காக ''எக்ஸ்பிரஸ்'' பத்திரிக்கை மீது வருமானவரி மோசடி குற்றம் சாட்டி ரெய்டு நடத்தி பீதியூட்டியதுதேர்தல் நேரத்தில் ''இந்து'' பத்திரிக்கை போஃபார்ஸ் ஊழலைப் பற்றிய புதிய ஆதாரங்களை வெளியிட்டதற்காக அதன் செய்தித் தொடர்பு கட்டணத்தை திடீரென உயர்த்தி நெருக்கடி கொடுத்து எச்சரித்தது.

★ ஏகாதிபத்திய, பன்னாட்டு கம்பெனிகளுக்கு நாட்டைச் சூறையாட கதவுகளை அகலத்திறந்து விட்டும், தரகு அதிகார முதலாளிகள் கூடுதல் கொள்ளை அடிக்க கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும், விசுவாச ஊழியம் செய்து அதன்மூலம் பாசிச கும்பல் ஆதாயமும் அடைந்தது. தரகு முதலாளி அம்பாணிக்கு அரசு நிதி நிறுவனங்களே விதிமுறைகளை மீறி தாராள உதவி செய்ததோடு, அம்பாணியின் பங்கு மார்க்கெட் மோசடிக்கு உடந்தையாகவும் செயல்பட்டன. அரசின் சட்டங்களும் கொள்கைகளும் இம்மோசடிக்காக வளைத்து முறுக்கப்பட்டதோடு, நீதிமன்றமே அதை நியாயப்படுத்தியது.

★ அரசின் பிரச்சார சாதனங்கள் அனைத்தும் ராஜீவின் பிரச்சாரச் சாதனங்களாக்கப்பட்டன. போஃபார்ஸ் என்ற பெயரைப் பயன்படுத்தினால் மேலும் அம்பலப்பட நேரிடும் என்று 'ஹோவிட்சர் பீரங்கி' என பெயர் மாற்றி செய்திகள் வாசிக்கப்பட்டன. வானொளி தேர்தல் பிரச்சார உரையில் போஃபார்ஸ் ஊழல் பற்றி பேசக்கூடாது என்று எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டது. அரசின் பிரச்சாரத் துறை (DAVP) தேர்தல் நேரத்தில் பாசிச ராஜீவ் கும்பலுக்கு வரிப்பணத்தை வாரியிறைத்து பிரச்சாரம் செய்தது. ''பஞ்சாயத்து ராஜ்ஜியம் பற்றி பிரதமர் ராஜீவ்'', ''சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி ராஜீவ்'' என்று பல்வேறு தலைப்புகளில் லட்சக்கணக்கான பிரசுரங்கள் அச்சிடப்பட்டு மக்களிடம் விநியோகிக்கப்பட்டன.

## பழைய - புதிய ஆட்சியாளர்களிடையே உடன்பாடுகள் - சமரசங்கள்



படிப்பகம்

## அமேதி தேர்தல் மோசடிக்கு அரசே உடந்தை!

நடந்து முடிந்த தேர்தலில் பாசிச ராஜீவ் கும்பலின் தேர்தல் தில்லுமுல்லு - மோசடிகளுக்கு அரசு எந்திரமே கேடாகப் பயன்படுத்தப்பட்டது. பாசிச ராஜீவ் போட்டியிட்ட அமேதி தொகுதியே இதற்கு எடுப்பான சாட்சியாக உள்ளது.

☆ அமேதியில் தேர்தல் நாளன்று மாவட்ட மாஜிஸ்டிரேட்டும், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டும் எங்கிருக்கிறார்கள் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. தில்லுமுல்லு - மோசடிகளும் வன்முறையும் தலைவிரித்தாடிய போது எதிர்க்கட்சியினரால் புகார்கூட கொடுக்க முடியவில்லை. இந்த நோக்கத்துடனேயே அவர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக தலைமறைவாகி விட்டனர். அதே சமயம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டின் ஜீப், பாசிச ராஜீவ் கும்பலின் முக்கியப் புள்ளியும், அமேதியில் தேர்தல் வேலைகளைக் கவனித்தவருமான சதீஷ் சர்மாவின் வீட்டில் நின்றிருந்தது!

☆ அமேதியில் தில்லுமுல்லுகள் நடந்த ஒரு வாக்குச் சாவடிக்குள் தேர்தல் கமிஷனின் சிறப்பு அனுமதி அட்டை பெற்ற ஒரு பத்திரிக்கையாளரை உள்ளே நுழைய விடாமல் வட்டார மாஜிஸ்டிரேட்டு விரட்டினார். "யாருடா தேர்தல் கமிஷன்? இங்க எல்லாமே நாங்க தான்!" என்று அதிகாரத் திமிரோடு கூறி அவரது அடையாள அட்டையையும் கிழித்தெறிந்தார்.

## உளவுத் துறையின் உதவியும்

இதைவிடக் கொடுமை என்னவென்றால் இந்தியப் புலனாய்வுத் துறையும், ரகசிய உளவு நிறுவனமான ''ரா''வும் தேர்தலுக்கு முன்பிருந்தே வாக்காளர்களின் மனோநிலை, கட்சிகளின் பலம் - பலவீனம் முதலானவை பற்றிய செய்திகளை ராஜீவ் கும்பலுக்குத் தெரிவித்து விசுவாச நாய்களாகச் சேவை செய்துள்ளன. இந்தியப் புலனாய்வுத்துறை (IB) தலைவராக உள்ள எம்.கே.நாராயணன் நீண்ட காலமாக காங்கிரசு விசுவாசியாக செயல்பட்டு வருபவர்.

தேர்தலில் காங்கிரசு அறுதிப் பெரும்பான்மை பெற இயலாது என்பதை முன்கூட்டியே உளவு நிறுவனங்கள் மூலம் அறிந்த நாராயணன், தனது நம்பகமான நபர் மூலம் ஆர்.எஸ்.எஸ். தலைவரிடம் காங்கிரசை ஆதரிக்கக் கோரி தூது அனுப்பினார். ராஜீவ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ராமஜென்மபூமி கோயில் இந்துக்களுக்கே உரிமையாக்கப்படும் என்று பேரம் பேசவும் செய்தார்.

வி.பி.சிங் வேட்பு மனுத் தாக்கல் செய்ய கான்பூரிலிருந்து விமானத்தில் செல்லவிருப்பதை அறிந்து அதைத் தாமதப்படுத்தும் சதித்திட்டம் போட்டதும் இதே நாராயணன்தான்! இப்படி நாராயணனைப் போல விசுவாசமாக செயல்பட்ட பல்வேறு உயர்அதிகாரிகளைப் பற்றிய செய்திகள் வெளிவர ஆரம்பித்து அரசு எந்திரத்தின் யோக்கியதையை அம்பலப்படுத்தி வருகின்றன.



ஊழல் - அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்தியது ஓட்டுப் பொறுக்குவதற்குத் தான்! பழைய 'பரிசுத்த'த்துடன் கைகுலுக்கி மகிழும் புதிய 'பரிசுத்தம்'!

## தண்டிப்பதா? மன்னிப்பதா?

இப்படி அடுக்கடுக்கான அரசியல் — பொருளாதார — கிரிமினல் — மோசடிக் குற்றங்களைச் செய்த பாசிஸ்டை, அரசு எந்திரத்தை தனது சுயநலன்களுக்காகப் பயன்படுத்திய மக்கள் விரோதியை தண்டிக்காமல் மன்னித்து விடுவதா? இத்தகைய கொடுஞ்செயல்களை ஒரு சாதாரண குடிமகன் செய்திருந்தால் அது தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம். ஆனால் பாசிச ராஜீவ் ஒரு அரசியல்வாதி — மக்களின் பிரதிநிதி என்பதால் தண்டிக்காமல் விடுவதா?

எதிராளி மீதான ஊழல் - கிரிமினல் குற்றங்களை அம்பலப்படுத்துவது ஓட்டுப் பொறுக்குவதற்குத் தானே ஒழிய, தண்டிப்பதற்கானதல்ல என்பதை ஓட்டுக் கட்சிகள் நீண்டகாலமாக ஒரு மரபாகவே பின்பற்றி வருகின்றன. முந்தைய ஆட்சியாளர்களின் ஊழல் - கிரிமினல் குற்றங்களைப் பற்றி புதிய ஆட்சியாளர்கள் விசாரித்தாலே பழி வாங்குகிறார்கள் என்ற பிரச்சாரம் கிளம்பி முந்தைய ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்பட்டு விடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். பாசிச இந்திராவின் அவசரநிலை அட்டூழியங்களை ஜனதா ஆட்சியாளர்கள் விசாரிக்கப் போய், அது மீண்டும் அவர் ஆட்சிக்கு வர சாதகமாக அமைந்ததை படிப்பினையாக்கிக் கொண்டுள்ளனர்.

எனவேதான் யாரையும் பழிவாங்க மாட்டோம் என்று புதிய ஆட்சியாளர்களும் அறிவிக்கிறார்கள். கேரளத்தில் அவசரநிலை பாசிச ஆட்சியின் போது புரட்சியாளர் ராஜனை போலீசார் மிருகத்தனமாக சித்திரவதை செய்து கொன்றதை பிரச்சாரம் செய்து ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டுகள் கூட யாரையும் தண்டிக்கவில்லை. மாறாக, குற்றம் சாட்டப்பட்ட கொலைகார போலீசாருக்கு பதவி உயர்வு கொடுத்து கௌரவித்தனர். ஆட்சிக்கு வந்ததும், முன்னாள் அ.தி.மு.க. மந்திரி திருநாவுக்கரசின் நகர்ப்புற வீட்டுமனை ஊழல்களை அடுக்கடுக்காக அம்பலப்படுத்திய கருணாநிதியும், பின்னர் அதைக் கண்டு கொள்ளாமல் கிடப்பில் போட்டார். இதே பாணியில்தான் போஃபார்ஸ் கொள்ளைக்காரன் பாசிச ராஜீவைத் தண்டிப்பதைப் பற்றிப் பேசாமல், "போஃபார்ஸ் ஊழல் பற்றிய முழு விபரங்களையும் கண்டறிவோம்" என்று புதிய ஆட்சியாளர்கள் அடக்கி வாசிக்கின்றனர்.

இன்னொரு வகையில் முந்தைய ஆட்சியாளர்களது ஊழலை விசாரிக்காமல் - தண்டிக்காமல் இருப்பது ஓட்டுப் பொறுக்கிகளுக்கு வசதியாக இருக்கிறது. நாளை இவர்கள் பரஸ்பரம் கட்சி மாறி, கைகுலுக்கிக் கொண்டு சந்தர்ப்ப வாதமாக கூட்டணி சேருவதற்கு இது மிக வசதியாக இருக்கிறது. நேற்றுவரை பாசிச எம்.ஜி.ஆரின் கட்சியிலிருந்த ஆலடி அருணா இன்று தி.மு.க.வுக்கு கட்சி மாறியதும் அவர் 'போஃபார்ஸ் ஊழலை எதிர்த்த போராளி'யாகி விடுகிறார். அவசரநிலை அத்துமீறல்களை விசாரித்த நீதிபதி ஷாவின் சட்டையைக் கிழித்து நீதிமன்றத்தில் மேசை மீதேறி கூத்



www.padippakam.com
படிப்பகம்

தாடிய பாசிச இளவரசி மேனகா காந்தி இன்று ஜனதா தளத்துக்கு வந்து மந்திரியானதும் அவர் பிராணிகள் வதைக்கப் படுவதற்கு எதிராகப் போராடும் சிறந்த சமூக சேவகியாகச் சித்தரிக்கப்படுகிறார்.

### தேர்தல் தோல்வியே தண்டனையாகுமா?

முந்தைய ஆட்சியாளர்களின் ஊழல் - கிரிமினல் குற்றங்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்பது பற்றி கட்டுரை எழுதியுள்ள எக்ஸ்பிரஸ் நாளேட்டின் ஆசிரியர் அருண்ஷோரி கூட இதே கருத்தைத் தான் பிரதிபலிக்கிறார்.

"ராஜீவ் எல்லை மீறிய தவறுகளையும் அதிகார முறைகேடுகளையும் செய்துள்ளார் என்பது உண்மைதான். ஆனால் தனிப்பட்ட முறையில் ராஜீவைத் தண்டிப்பது கூடாது; அது மீண்டும் அரசு எந்திரத்தை கேடாகப் பயன்படுத்துவதாகி விடும், பழிவாங்கும் நோக்குடையதாகி விடும். தேர்தலில் காங்கிரசுக் கட்சியை மக்கள் தோற்கடித்ததே பெரும் தண்டனையாகும்" என்கிறார். அதாவது ஒரு பாசிஸ்ட் மக்கள் பிரதிதி என்ற போர்வையில் ஐந்தாண்டு காலத்துக்கு எவ்வளவு அயோக்கியத்தனங்கள் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அவரை தேர்தலில்தான் தண்டிக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் அவரது குற்றங்களுக்காக தண்டித்தால், அது அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்துவதாகி விடும் என்பதுதான் அருண்ஷோரி போன்ற முதலாளித்துவ அறிஞர்களின் வாதம்.

சரி; ஆளுங்கும்பலுக்கு விசுவாசமாகச் செயல்பட்டு அட்டூழியங்களைச் செய்த உயர் அதிகாரிகளை என்ன செய்வது? "ஆட்சியாளர்கள் ஒரு உத்திரவு போட்டால் அதை அப்படியே பின்பற்றுவதா? எது மக்களின் நலன்களுக்கு உகந்தது, எது சட்டப்படி சரியானது என்று அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டாமா?" என்று ஆதங்கப்பட்டுவிட்டு "ஆட்சியாளர்கள் ஒவ்வொன்றுக்கும் உத்திரவு போட்டு அதன்படி அதிகாரிகள் அயோக்கியத்தனங்களைச் செய்வது என்றில்லை; பல அதிகாரிகள் இது ஆட்சியாளர்களின் நலனுக்கு ஏற்றது; இதை அவர் விரும்புவார்; இதற்காக தமக்குப் பாராட்டும் பதவி உயர்வும் அளிப்பார்கள் என்று உத்திரவு இல்லாமலேயே பல அயோக்கியத் தனங்களைச் செய்துள்ளனர். இத்தகையவர்களைத் தண்டிப்பதில் தவறேதுமில்லை" என்கிறார் அருண்ஷோரி.

அவர் குறிப்பிடும் தண்டனை இமயமலைக்கு அப்பாலோ அல்லது இந்துமாக் கடலிலோ இந்த ஒட்டுண்ணி கும்பலைத் தூக்கி வீசுவதல்ல; இலாகா மாற்றங்களும், தற்காலிக பதவி நீக்கமும்தான்! "இந்த தண்டனை மட்டும் போதாது. அவர்களது அயோக்கியத் தனங்களை எழுத்துப் பூர்வமாக கோப்புகளாக்க வேண்டும். அவசியமானால் இவற்றை பள்ளி - கல்லூரிகளில் பாடமாக்கவும் வேண்டும். அதன் மூலம் வருங்காலத்தில் இத்தகைய அதிகார முறைகேடுகளை ஒழித்துவிட முடியும்" என்று நம்பச் சொல்கிறார்.

www.padippakam.com



அவசர நிலை ஆட்சியில் பாசிச ஆட்டம் போட்ட மேனகா காந்தி இப்போது மத்திய மந்திரி.

ஆனால் ஒவ்வொரு முறையும் ஆட்சி மாறும் போது பழைய ஆட்சியாளர்களது மோசடி, தில்லுமுல்லு, சதிகள், ஊழல்களைப் பற்றிய கோப்புகளும், ரகசிய ஆவணங்களும் அழிக்கப்படுவதுதான் மரபாக உள்ளது. ஓட்டுக்கட்சிகளிடையே இது எழுதப்படாத ஒப்பந்தமாக நிலவுகிறது. 1975-77 அவசர நிலை பாசிச காட்டாட்சி பற்றிகூட அரசாங்க ஆவணங்கள் இல்லை. நீதிபதிகள் ஷா, குப்தா, ஜகன்மோகன் ரெட்டி ஆகியோரின் அவசரநிலை அத்துமீறல்கள் பற்றி அறிக்கைகள் கூட அரசாங்கப் பரண் மீதுதான் உள்ளது. இந்த லட்சணத்தில், கொக்கு தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கும் கோமாளித் திட்டத்தை அருண்ஷோரி கூறுவது, நல்ல வேடிக்கை!

அது ஒருபுறம் இருக்கட்டும்! அருண்ஷோரி ஆதரிக்கும் புதிய ஜனதாதள ஆட்சியாளர்களாவது இதைச் செய்வார்களா? ஒருக்காலும் மாட்டார்கள். ஏனெனில் இந்த அதிகாரிகளுக்கு எல்லாவகை தில்லுமுல்லுகளும், உள்விவகாரங்களும் தெரியும்; அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நோக்கத்தோடுதான் "யாரையும் பழிவாங்க மாட்டோம்" என்று

ராஜீவின் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த அதிகாரி கோபி அரோரா



புதிய ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். ராஜீவ் கும்பலுக்கு விசுவாச சேவை செய்த அதே அதிகாரிகளை தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் துடிக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து கௌரவிக்கிறார்கள். ராஜீவின் கூட்டாளியும் நிதித்துறை செயலருமாக பணியாற்றிய கோபி அரோரா இன்று ஐ.எம்.எப்.நிதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளார். ராஜீவின் விசவாச ஏவல் நாயாக செயல்பட்ட புலனாய்வுத் துறையின் தலைவரான நாராயணன் இன்னும் அதே பொறுப்பிலிருந்து கொண்டு புதிய ஆட்சியாளர்களுக்கு சேவை செய்கிறார். ராஜீவின் ஊதுகுழலாக இயங்கிய தொலைக்காட்சியை, சுயேட்சை நிறுவனமாக மாற்ற உத்தேசித்துள்ளதாக தேசிய முன்னணி அரசின் செய்தி - ஒலிபரப்புத் துறை மந்திரி உபேந்திரா செய்த அறிவிப்பையே, 13 முறை "உபேந்திரா" எனும் பெயர் வருமாறு ஒலி, ஒளி பரப்பியது தொலைக்காட்சி.

இந்த அசிங்கங்களைக் காணச் சகிக்க முடியாத அருண்ஷோரி, "எல்லோரும் சுயநலவாதிகள். மதுதண்டவதே போல அரசு எந்திரத்தைத் தமது சுயநலன்களுக்குப் பயன்படுத்தாத தூய அரசியல்வாதிகள் வேண்டும். அப்போதுதான் அரசு எந்திரம் இப்படிக் கறைபட்டுக் கிடப்பதை துடைத்தொழிக்க முடியும். ஆனால், அந்தோ! நம்மிடம் மதுதண்டவதேக்கள் குறைவாகத்தானே இருக்கிறார்கள்!" என்று தீர்வு காண முடியாமல் ஒப்பாரி வைக்கிறார்.

இதுதான் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையின் யோக்கியதை! ஊழல் - கொள்ளையில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகளையாவது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள், தேர்தலின் போது தோல்வியடையச் செய்து 'தண்டிக்கலாம்'! ஆனால் அரசு எந்திரத்தின் அங்கங்களான அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை, உளவுத்துறையினரை மக்களால் தண்டிக்கவே முடியாது. மக்களிடமிருந்து அந்நியமான, மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய எந்தப் பொறுப்பும் இல்லாத, மக்கள் விரோத செயல்களில் ஈடுபடும் திமிர் பிடித்த அதிகார வர்க்கத்தை இன்றைய ஆட்சிமுறையில் ஒருக்காலும் தண்டிக்க முடியாது.

சட்டதிட்டங்களை நிறைவேற்ற மட்டுமே மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிமை, அவற்றை அமுல்படுத்துவது அரசு எந்திரத்துக்குள்ள உரிமை என்ற இன்றைய இரட்டை ஆட்சிமுறையில் - நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் இது அறவே சாத்தியமில்லை. ஆட்சியாளர்களும் அரசு எந்திரமும் ஊழல் - கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுவது எல்லை மீறிப் போவதைக் கண்டு முகஞ்சுளிக்கும் முதலாளித்துவ அறிஞர்களால் இன்றைய கேடுகெட்ட ஆட்சிமுறைக்குள் தீர்வு காணவும் முடியாது. தேர்ந்தெடுக்கப்படும் பிரதிகளுக்கு சட்டம் இயற்றவும், நிர்வகிக்கவும், குற்றமிழைத்தால் அவர்களது பதவியை, பொறுப்பை ரத்து செய்து தண்டிக்க மக்கள் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயக ஆட்சிமுறை தான் இதற்கு தீர்வாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

# டாக்டர் இராஜினி திரணகம கொலை:

மிடுக்கான இராணுவ உடுப்பும், தோட்டாக்களின் மாலையும், பாக்கெட்டுக்களில் எறிகுண்டுகளும், கையிலே இயந்திரத் துப்பாக்கி ஏ.கே.47ம் ஏந்தி, 'போராளி' என்ற பட்டங்கட்டிக் கொண்டிருந்த போதும், பகிரங்கமாக உரிமை பாராட்டிக் கொள்ள முடியாத அநீதியான ஒரு செயலைச் செய்யும்போது எவ்வளவு கோழையாகி விடுகிறான்!

புறநிலை நோக்கு, உண்மை மீதான வேட்கை, நடுவு நிலையான ஆய்வு, நேர்மையான நிலைப்பாடுகள் ஆகிய இலட்சியத்தையே ஆயுதமாக ஏந்தி மனித உரிமை - நீதிக்காகப் போராடும்போது நிராயுதபாணியான ஒரு தாயும் எவ்வளவு வீரமிக்க போராளியாக உயர்ந்து நிற்கிறாள்!

யாழ் பல்லைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் தலைவர், வைத்தியக் கலாநிதி இராஜினி திரணகம அத்தகைய வீரத்தாயாக, 'நிராயுதபாணி'யான பெண் பேராளியாக வாழ்ந்தார். இவர் கடந்த செப்டம்பர் 21ந் தேதி மாலை ஆறு மணிக்கு மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வை முடித்துக் கொண்டு தனியே வீடு திரும்பினார். அவருக்காகக் காத்திருந்த ஒரு கொடிய முகந்தெரியாத கோழை ஈனத்தனமான முறையில் இராஜினி திரணகமவைச் சுட்டுக் கொன்றான்.

டாக்டர் இராஜினி திரணகமவின் கொலைச் செய்தி கேட்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், இன்னும் சிந்திக்கும் திறனை இழந்து விடாத அல்லது அதனை அடகு வைத்துவிடாத ஈழத் தமிழர்கள் அனைவருமே அதிர்ச்சியும் துயரமும் அடைந்தனர். அவர்கள் ஒரே குரலில் உரக்கக் கேட்டனர் ''இப்படி ஈனத்தனமாக படுகொலை செய்யப்படுமளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?''

இராஜினி திரணகம — யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து பின்னர் இங்கிலாந்தில் உடல் அமைப்பியல் கலாநிதி பட்டம் பெற்றார். ஈழத்தின் இப்போதையை நிலைமைகளை எதிர்நோக்கப் பயந்து வெளிநாடுகளில தமது சுகபோகங்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஈழத்தின் புத்திஜீவிகள் வெளியேறும் பொழுது, 3 வருடங்களுக்கு முன்பு சமூகப் பொறுப்புணர்ந்து யாழ்ப் பல்கலைக் கழகத்துக்கே திரும்பி விரிவுரையாளராகப் பணியாற்றியது குற்றமா? கணவர் திரணகம தென்னிலங்கையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் தனியொருத்தியாக இரு பெண் குழந்தைகளுடன், மருத்துவத் துறையின் சுமை மிகுந்த பிரிவை மிகத் திறம்பட நடத்திக் கொண்டு வந்தது குற்றமா?

ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் இன்றைய துயரங்கள் - அவல நிலைமைகளுக்கு காரணமான போராளிக் குழுக்கள், இலங்கை அரசு, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அக்கிரமங்கள், அட்டூழியங்கள் கண்டு கொதித்தெழுந்தார். இத்தகைய பல வீனமான நிலையில் தன்னைப் போன்ற புத்திஜீவிகள் கட்டாயம் சிறந்த எதிர்கால நோக்குடன் கூடிய தீர்வுகளை முன் வைத்து சமுதாயத்தை தூக்கி முன் நிறுத்தும் சமூகப்பணி - பாத்திரம் ஆற்ற வேண்டும் என்று முயன்றார். அதன் விளைவாக அதே சிந்தனை நோக்குடைய 3 சகவிரிவுரையாளர்களுடன் இணைநது ''முறிந்த பனைமரம்'' என்ற விமர்சன ஆய்வு நூலை வெளியிட்டார். அதிலே ஈழத்தின் நிகழ்கால அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் உள், வெளி ஆதிக்க சக்திகள் எல்லாவற்றையும் ஒரு நடுவுநிலை நோக்கில் விமர்சனம் செய்திருந்தார். இக்குழப்பமான, தெளிவில்லாத காலகட்டத்தில் வெளிப்படையாக, தெளிவாக ஈழ மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை வைத்தது குற்றமா?

## ஈழத் தமிழ் சமுதாயத்துக்கு ஒரு சவால்!



ஒடுக்கப்பட்டுள்ள இனத்துள் மேலும் ஒடுக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைக்காகவும் நடந்து கொண்டிருக்கிற சாவுகளினால் விதவைகளாகி, வாழ்வதே சுமையாகிப் போன பெண்களுக்காகவும் தனது கருத்துக்களை எந்த இடத்திலும் முன் வைத்து பெண்கள் சமத்துவத்தைத் தோற்றுவிக்க அயராது உழைத்தது குற்றமா?

தொடர்ந்து வந்த கால கட்டங்களில் நிகழ்ந்த, சிறுவர்களை பலவந்தமாக கடத்திப்போய் இராணுவங்களில் சேர்ப்பது போன்ற அட்டூழியங்களைக் கண்டு மனம் பொறுக்காமல் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை உருவாக்கி எல்லா அத்து மீறல்களுக்கும் எதிராக குரல் கொடுத்தது குற்றமா?

— இந்தக் கேள்விகளை எழுப்பிவிட்டு இக்கொலை பாதகச் செயலுக்கு காரணமானவர்கள் அதற்கான காரணங்களைக் கூறி, உரிமை கோரித் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும்படி பகிரங்கமான கோரிக்கை வைத்தனர் யாழ் பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர், ஊழியர்கள். ஆனால் கோழைகள் வெளியே வரவில்லை; உரிமை பாராட்டவோ, காரணங்களைக் கூறி நியாயப்படுத்தவோ இல்லை. இதுவே போதும் அவர்களின் செயல் அநீதியானது; இராஜினி திரணகமவின் தியாகம் மகத்தானது என்று நிரூபிப்பதற்கு!

கடமைப் பொறுப்புள்ள சாதாரண மருத்துவ பீட விரிவுரையாளராகவும், தாயாகவும் வாழ்ந்திருந்தால் இராஜினி திரணகம பிழைத்திருக்க முடியும். இல்லை, அவர் மட்டுமல்ல; ஒவ்வொருவரும் சமூகத்தைப் பாதிக்கும் விவகாரங்களில் கொள்கை ரீதியானதும் துணிவானதுமான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவரே துணிச்சலானவராகவும் சமுதாயம் அவ்வாறு இல்லாதது குறித்தும், கட்டாய இராணுவ ஆள்சேர்ப்பு போன்ற விவகாரங்களில் ஏனைய சமூக அமைப்புகள் செயலற்றிருந்தது கண்டும் கவலைப் பட்டார். ''எங்கள் பலரின் உயிருக்கு ஆபத்தானதாகவும் இருக்கும்'' என்று அறிந்தே சமூகப் பொறுப்பு காரணமாக துணிச்சலான, அவசியமான பணிகளை மேற்கொண்டு அதற்காகவே தியாகியானார்.

டாக்டர் இராஜினி திரணகம யாரால் கொல்லப்பட்டார் என்று ஊகிப்பது சிரமமானதல்ல. முக்கியமாக இந்திய ஆக்கிரமிப்பு மற்றும் ஈழத் துரோக அமைப்புகளின் அக்கிரமங்கள் அட்டூழியங்களை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார். ஈழத் துரோக ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எஃப், அல்லது ''டெலோ''வின் குண்டுகளுக்கு இராஜினி பலியாகி இருக்கலாம். அதே சமயம் அவரது பணிகள் மற்ற பிற பெரிய குழுக்களுக்கும் கூட நெருடலாகவே இருந்தன. எனவே எந்தக் குழுவினால் கொல்லப்பட்டார் என்பதை விட எந்தக் குழு முந்திக் கொண்டது என்பதே பொருத்தமானதாகும்.

காரணங்களையும், நியாயங்களையும் கூறி உரிமை கோரவும் துணிச்சலற்ற, அநீதியான முறையில் நிராயுதபாணிகளைப் படுகொலைகள் செய்வது ஈழத்தில் வழக்கமாகி விட்டது. மக்களின் விடிவுக்காக, நாட்டின் அமைதிக்காக, தேசத்தின் உரிமைக்காக போரிட ஆயுதம் ஏந்தியிருப்பதாக கூறிக் கொள்ளும் எல்லா போராளிக் குழுக்கள் கரங்களிலும் இராஜினி திரணகம போன்ற தியாகிகளின் இரத்தக்கறை படிந்திருக்கிறது.!

இராஜினி திரணகமவின் கொலை தனிப்பட்ட சம்பவமன்று; சமூகநலனில் அக்கறை கொண்ட முற்போக்கு எண்ணமுடைய அனைவரையும் வாய்மூடி மௌனியாக இருக்கும்படி எச்சரிக்கும் செயலாகும். இந்தச் சவாலை எதிர்த்து முறியடிப்பதன் மூலம் தான் ஈழச் சமுதாயமே மனிதத் தன்மையோடு பிழைத்திருக்க முடியும்!

□ மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

கடந்த 'புதிய ஜனநாயகம்' இதழிலும்,இந்த இதழிலும் இடம் பெற்ற கேள்விகள் 'புதிய ஜனநாயகம்' ஏட்டின் ஐந்தாம் ஆண்டு விழாவில் எழுப்பப்பட்டவை. முழுமையாககவும் விரிவாகவும் பதிலளிக்கும் நோக்கத்தோடு அவை பிரசுரிக்கப்படுகின்றன. எஞ்சிய கேள்விகளுக்கு இனிவரும் இதழ்களில் பதில் வரும். கேள்வி - பதில் பகுதியாக இதுதொடரவேண்டும் என்று முடிவு செய்துள்ளோம். வாசகர்களும் வரவேற்றுள்ளனர். எனவே தொடர்ந்து கேள்விகள் எழுதி அனுப்புமாறு கோருகிறோம். பெயரில்லாத கேள்விகள், பெயர் குறிப்பிட விரும்பாத தோழர்கள் அனுப்பியவை.




## புரட்சியாளர்களின் ஐக்கியம்...

★ இந்தியப் புரட்சியில், புரட்சியாளர்கள் ஒருங்கிணைப்பு பற்றிய பார்வை என்ன? அதை நடைமுறைப்படுத்தும் பாதை என்ன?

● இந்தியப் புரட்சியாளர்கள் பல குழுக்களாகப் பிளவுபட்டிருப்பது வேதனைக்குரியது. எதிரிக்குச் சாதகமானதாகவும், புரட்சிக்குப் பாதகமானதாகவும் உள்ளது. ஆனால் அவசியம், விருப்பம் காரணமாக புரட்சியாளர்களின் ஐக்கியத்தை அவசரமாகவும் கலபமாகவும் சாதித்துவிட முடியாது. ஓடுகாலிகளாகச் சீரழிந்து போன பல குழுக்களும் புரட்சி வேடம் போட்டுத் திரிவதால் உண்மையான புரட்சிகரக் குழுக்களை வரையறுக்க வேண்டும். வேறுபாடுகளைப் பொதுவான வார்த்தைகளில் ஒளித்து வைத்துக் கொண்டு சந்தர்ப்பவாதமாக ஏற்படும் ஐக்கியம் மேலும் அதிகமான பிளவுகளையே கொண்டு வருகின்றன என்று அனுபவங்கள் காட்டுகின்றன.

மிகச் சரியானவை என்று நிரூபிக்கப்பட்டு வரும் இ.பொ.க (மா-லெ)யின் அடிப்படை நிலைப்பாடுகளை ஏற்று அமுல்படுத்துபவையே புரட்சிகர குழுக்களாகும். அவற்றோடு அரசியல் மேற்கட்டுமானம், அரசியல்- இராணுவப் பாதையைத் தீர்மானிக்கும் யுத்ததந்திரம், கட்சி நிறுவனக் கோட்பாடுகள் போன்றவற்றில் ஒத்த கருத்தடைய குழுக்கள் ஒரே கட்சியில் ஐக்கியப்பட வேண்டும். புரட்சிகரக் குழுக்களை வரையறுத்து, சித்தாந்தப் போராட்டம் மற்றும் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் இதைச் சாதிக்க முடியும்.

★ அனைத்து மாநிலங்களிலும் உள்ள புரட்சிகர அமைப்புகளின் ஐக்கியம்- ஒற்றுமையின்றி புரட்சியைச் சாதிக்க முடியுமா?

● முடியாது! புரட்சியின் வெற்றிக்கு புரட்சிகரக் குழுக்களின் ஐக்கியம் முன் நிபந்தனையாகும்.!

★ புரட்சிகரக் கட்சி அமைப்பு தொடங்கி சிறிது காலத்திலேயே கருத்து வேறுபாட்டில் பல குழுக்களாகப் பிரிந்து நின்று கருத்துவாதம் புரியும் நமது அணிகளை, வெற்றியை ஈட்டும் வரை ஒருங்கிணைத்து செல்வது சாத்தியப்படுமா? புரட்சி வெற்றி பெற்றபின் பதவிச் சண்டைகள் வராது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

● சாத்தியந்தான்! இடையறாத முயற்சியும், சமரசமற்ற உறதிப்பாடும் புரட்சியாளர்களின் ஐக்கியத்தை சாத்தியமாக்கும்; புரட்சிகரப் புற நிலைமைகள் அதைத் துரிதப்படுத்தும். ஆனால் பல ஆண்டுகளாகப் பிளவு நீடிப்பது தோழருக்கு அவநம்பிக்கையையும், சித்தாந்தப் போராட்டம் அலுப்பையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது!

சரியான பாதைக்கும் தவறான பாதைக்கும் இடையிலான போராட்டம் புரட்சியின் போது மட்டுமல்ல; அதன் பிறகும் நீடிக்கும்; அதைச் சரியாகக் கையாளத் தவறினால் பிளவும் ஏற்படும் என்று பலநாட்டு அனுபவங்கள் காட்டுகின்றன. ஆனால் நல்லெண்ண பாவம் காட்டி அப்போராட்டத்துக்கு வெளியே, நடுநிலை மேற்கொண்டு நின்று அவநம்பிக்கையும் சலிப்பும் அடைவது குட்டி முதலாளியப் போக்கு என்கிறார் லெனின். அதற்குமாறாக, ''உங்கள் கருத்து வேறுபாடுகளை எங்களிடம் கூறுங்கள், நாங்களும் அதிலே கலந்து கொள்கிறோம்'' என்று ஊக்கமுடன் முன்வந்து சித்தாந்தப் போராட்டத்தில் பங்கேற்றார்கள், பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் என்கிறார்.

தோழரே குறிப்பிடுவது போல கருத்து வேறுபாடுகள் காரணமாக எழுவதுதான் 'இந்த சண்டை'! ஆனால் எந்தக் கொள்கை - பாதையை அமுலாக்குவது என்பதற்கான போராட்டம் கட்டாயம் அரசியல் அதிகாரத்துக்கான வர்க்கப் போராட்டத்தின் வடிவமெடுக்கும். அதையே முதலாளித்துவக் கட்சிகளுக்குள் எழும் வெறும் பதவிச் சண்டை போன்றதெனக் கொச்சைப்படுத்தக் கூடாது.

## போலிகளின் அவதூறு!

★ புரட்சிகர இயக்கங்களை 'கம்யூனிஸ்ட்கள் அல்ல' என்றும் 'ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்' என்றும் இந்திய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி (CPI(M))யினர் (அவர்கள் அணிகளிடத்தில்) பிரச்சாரம் செய்கிறார்கள். இது எந்த விதத்தில் உண்மை?

— ராஜ்மோகன், மன்னை

● இது எந்த விதத்திலும் உண்மையில்லை. தங்களுடைய அணிகள் புரட்சிகர இயக்கத்துக்கு வந்து விடாமல் தடுத்துத் தக்க வைத்துக் கொள்வதற்காக செய்யும் அவதூறுதான்! இப்படி அவதூறுகள் செய்பவர்கள் எப்போதாவது புரட்சிகர இயக்கங்களை 'கம்யூனிஸ்ட்டுகள் அல்ல' என்று நிரூபிப்பதற்கான அரசியல் சித்தாந்தப் போராட்டம் நடத்தியதுண்டா?

கடந்த 20 ஆண்டுகளில் மிக அதிக அளவில் சிறை, சித்திரவதை, படுகொலைகளுக்கு பலியானவர்கள் புரட்சிகர இயக்கத்தினர் தான். இவர்கள் 'ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்' என்றால் ஏகாதிபத்திய சார்பு அரசு என்று சி.பி.எம்.மே கூறும் அரசு இப்படிச் செய்யுமா? புரட்சிகர இயக்கத்தினரோடு தமது அணிகளுக்கும் நடந்த கொடுமைகளை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவும், புரட்சியாளர்கள் அனைவரையும் விடுதலை செய்வதாகவும் 1977 தேர்தலில் வாக்குறுதி கொடுத்துத் தான் சி.பி.எம். மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வந்தது. 'ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்' என்றால் மக்களிடம் அம்பலப்படுத்தி ஒட்டுக் கேட்க வேண்டியது தானே, இவர்களுக்கு என்ன அக்கறை? பிறகு தனது அணிகளுக்கும் சேர்த்து துரோகம் செய்து விசாரணைக் கமிஷன் விவகாரத்தைக் கிடப்பில் போட்டு விட்டது. கொலைகள் - கொடுமைகளுக்கு காரணமான போலீசு குற்றவாளிகளுக்குப் பதவி உயர்வு கொடுத்தது. விடுதலை செய்து புரட்சியாளர்களை மீண்டும் சிறையில் அடைத்தது. கேரள ராஜன் விவகாரம் போல ஓட்டுப் பொறுக்குவதற்காகப் பயன்படும் போது மட்டும் புரட்சியாளர்கள் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என்பதை மறந்து விடுவதா?

மேலும் புரட்சிகர இயக்கங்களை 'ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்' என்று அதிகாரபூர்வமாக எழுதுவதற்குக் கூட சி.பி.எம்.முக்குத் துணிவு கிடையாது; ஏனெனில் அதை நிரூபிக்க வேண்டுமல்லவா? எனவே வெறும் வதந்தியாக அணிகளிடையே வாய்வழிப் பிரச்சாரம் செய்கின்றனர். தன்னார்வக் குழுக்களும் புரட்சிகரக் குழுக்களும் பற்றி சி.பி.எம்.மின் டில்லி செயலாளர் பிரகாஷ் காரத் எழுதிய நூல் தான் ஆதாரமென்று கூறுகிறார்கள். இந்திய அரசியல் இயக்கங்கள் அனைத்திலுந்தான் ஏகாதிபத்தியக் கைகூலிகளான தன்னார்வக் குழுக்கள் ஊடுருவ முயலுகின்றனர். புரட்சிகரக் குழுக்கள் அதை எதிர்ப்பதோடு, அதற்குப் பலியான வினோத் மிஸ்ரா தலைமையிலான குழு போன்றவற்றையும் அம்பலப்படுத்தி எதிர்க்கின்றனர்.

ஆனால் சி.பி.எம்., சி.பி.ஐ. முதலிய போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குள் கூட ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்கள் ஊடுருவ



படிப்பகம்

முயன்று வெற்றி பெற்று விட்டதாக அவர்களே ஒப்புக் கொண்டுள்ள னர். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலும், கர்நாடகாவிலும் சி.பி.எம். கட்சிக்குள் அவை ஊடுருவி விட்டன என்று அக்கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானமே ஒப்புக் கொள்கிறது. அமெரிக்கத் தன்னார்வ அமைப்பிடம் பணம் வாங்கிய விவகாரத்தைக் காட்டித் தமிழக சி.பி.ஐ. பிளவு பட்டது. ஆனால் இந்தப் போலிகள் புரட்சிகர இயக்கங்கள் மீது அவதூறு செய்கின்றனர்.

சமீபத்திய போடி கலவரத்தில் நக்சல்பாரிகள், விவசாயிகள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது என்று ''தீக்கதிர்'' எழுதியது. உண்மையில் சாதிக் கலவரத்தை எதிர்த்து துணிவோடு அங்கு போராடியவர்கள் புரட்சியாளர்கள் தான்! இப்படி ஜாதி, மதப் பிரச்சினைகள், தேசிய இன விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்க முடியாதபோது எல் லாம் ஏகாதிபத்திய சதி, ஊடுருவல் என்று அவதூறு பேசித் தட்டிக் கழிப்பது போலிகள் வாடிக்கையாகப் பின்பற்றும் கொள்கையாகவே உள்ளது. இந்த விவகாரத்தில் இவர்கள் பாசிச ராஜீவ் கும்பலையும் விஞ்சி விட்டார்கள் என்று கூறலாம்.

## ஜே.வி.பி.- பிளாட் பற்றி...

★ *ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தையும், அமெரிக்க ஏகாதிபத் தியத்தையும், இலங்கை இனவெறி அரசையும், இந்திய ஆளும் கும்பலின் விஸ்தரிப்பு நோக்கத்தையும் எதிர்த்து மக் கள் திரள் பாதையிலும், துரோகிகளை முறியடித்தும் வீறு நடை போட்டுக் கொண்டு வரும் மக்கள் விடுதலை முன்னணி - ஜே.வி.பியை நமது புதிய ஜனநாயகம் ஒரு சிங்கள பயங்கர வாதிகள் என்று சித்தரிப்பது சரிதானா?*

சந்திரமோகன் - ஊற்றங்கரை

● தவறான தகவல்களின் அடிப்படையில் இக்கேள்வி அமைந்துள் ளது. ஜே.வி.பி ரஷ்யாவைச் சமூக ஏகாபதிபத்தியம் என்று கருதவோ எதிர்க்கவோ இல்லை. சோசலிச நாடாகவே கருதுகிறது. இந்தியா வைத்தான் ஏகாதிபத்தியம் என்று வரையறுத்து இதன் விஸ்தரிப்பு நோக்கத்தை எதிர்க்கிறது. அதற்காக ஆதரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 'இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்குத் துணை போகும் துரோகிகள்' என்று இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறது; தமிழ், சிங்கள இனங்க ளிடையே சமஉரிமை என்று பேசினாலும் தேசிய இனங்கள் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை ஜே.வி.பி. ஏற்கவில்லை. ''மக்கள் திரள் பாதையிலும் துரோகிகளை முறியடித் தும் வீறுநடை போடு''வதாகக் கூறுவதும் தவறு. தொழிலாளர் - மாணவர் வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள், ஆர்ப்பாட்டங் கள் போன்ற மக்கள் திரள் வடிவங்களை மேற்கொண்டாலும் அவை இரண்டாம் பட்சமானவை தான்! இரகசிய சதி போன்ற தனிநபர் பயங்கரவாதச் செயல்களே அதன் பிரதான வழிமுறையாக உள்ளது என்பதே உண்மை. ஜே.வி.பி.யை ஏன் சமூக பாசிச இயக்கமாகக் கருதுகிறோம் என்பதற்கான விளக்கத்துக்கு இந்த இதழில் பிரசுரித் துள்ள ஜே.வி.பி.பற்றிய சிறப்புக் கட்டுரையைப் படிக்கவும்.

★ *ஜே.வி.பி.யை சமூக பாசிச பயங்கரவாத இயக்கமென ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதன் பொருள் என்ன? ஜே.வி.பியின் கொள்கை, இலட்சியம், நடைமுறை ஆகிய வற்றை விளக்குக.*

— வாசகர் வட்டம், கல்லை

● ஜே.வி.பி. பற்றிய சிறப்பு கட்டுரையைப் படிக்கக் கோருகிறோம்.

★ *இந்திய ஆளும் கும்பலின் தலையீட்டை, ஆதிக்கத்தை எதிர்த்து தேசபக்த போராட்டத்தை நடத்தம் ஜே.வி.பியையும் விடுதலைப் புலிகளையும் நிபந்தனையின்றி ஆதரிப்பதில் என்ன தவறு?*

— அறிவுமணி, ஊற்றங்கரை

● நிபந்தனையின்றி ஆதரிக்க வேண்டுமானால் அவை சரியான நிலைப்பாடுகளும் வழி முறைகளும் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஜே.வி.பி.யும் விடுதலைப் புலிகளும் அப்படியில்லை. குறிப்பாக வென்றெடுக்கப்பட வேண்டிய இடைநிலை மக்களையும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனநாயக வாதிகளையும், அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டிய சமரச சக்திகளையும் கூட எதிரிகளாகப் பாவித்து பாசிச முறைகளில் கொலை செய்கிறார் கள். பிறகு எப்படி நிபந்தனையின்றி ஆதரிக்க முடியும்?

★ *ஈழப் பிரச்சினை பற்றி மிகமிகத் தெளிவானதொரு சிறப் பான ஆய்வும் இயக்கங்கள் ஒவ்வொன்றின் நிலை பற்றியும் தொடர்ந்து சிறப்பாக வெளியிட்டீர்கள். ஆனால் 'பிளாட்' (PLOTE) தோழர் உமா மகேஸ்வரனின் கொலை பற்றி எந்தத் தகவலும் கொடுக்கப்படவில்லையே, ஏன்?*

● இந்த ஆண்டு ஜூலை 13ந் தேதி அமிர்தலிங்கம், யோகேஸ்வ ரன் கொலைகள் நடந்தன. அடுத்தடுத்து உமா மகேஸ்வரன் கொலை பிரபாகரன் கொல்லப்பட்டதாக வதந்தி ஆகிய செய்திகள் வந்தன. இதற்கு முன்பாகவே ஜூலை 16-31 புதிய ஜனநாயகம் இதழைத் தயாரித்து அச்சிட்டு விட்டோம். இவை பற்றி அடுத்த இதழில் எழுதவிருந்தோம். ஆனால் இந்தியப் படை விலக்கத்துக்கு இலங்கை அதிபர் கெடு வைத்தது, இந்திய - இலங்கை கெடுபிடி போர், மோதல் நிலைமை, திடீர் சமரசம் - சரணடைவு என்று அரசியல் நிலைமைகள் வேகமாக மாறிக் கொண்டிருந்தன. அப்போது இலங்கை அரசியலில் பெரும் வீச்சை ஏற்படுத்திய ஜே.வி.பியின் வளர்ச்சி முக்கியமானதாகியது. இந்த நிலைமைகளில் அமிர்தலிங் கம், யோகேஸ்வரன், உமா மகேஸ்வரன் கொலைகள் பற்றி எழுத முடியாமற் போனது.

கொலை, கொள்ளை, கடத்தல் முதலிய சமூக விரோத கிரிமி னல் குற்றங்களில் ஈடுபட்டது; இந்திய உளவுப் படையான ''ரா''வுக்கு இயக்கத்தை அடகு வைத்ததோடு அதன் உளவாளிகள் தனி இயக்கத்தின் மூலமாக ஈழ விடுதலை எதிர்ப்பு நடவடிக்கைகள் செய்ய இடமளித்தது; 200க்கும் மேற்பட்ட சக போராளிகளை கொடிய - மிருகத்தனமாக முறையில் கொன்றது; மாலத்தீவுக்கு 'கூலிப்படை' அனுப்பியது; கடைசியாக இந்திய ஆக்கிரமிப்பாளர்க ளிடமும், இலங்கை பாசிச ஆளும் கும்பலிடமும் தனது துரோகத்த னத்துக்கு பேரம் பேசியது; போராளிகள் களத்திலே செத்து மடியும் போது ஆடம்பர சுகபோகத்தில் மூழ்கி கிடந்தது - இப்படி உமா மகேஸ்வரனின் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக் கமாகக் கூறினால், மார்க்சிய - லெனினியவாதி, போராளி என்ற வேடமணிந்த ஒரு கிரிமினல் மஃபியா கும்பலின் தலைவனாகவே வாழ்ந்து மடிந்தார் எனலாம். தனது சொந்த அமைப்பைச் சேர்ந்த தோழர்களையே எந்த முறையில் தீர்த்துக் கட்டினாரோ அதே முறை யில் அவருக்கு முடிவு வந்தது. தியாக சீலரான போராளி சந்ததியா ரின் கண்களைத் தோண்டி, கை, கால்களை வெட்டிக் கடலிலே வீசிக் கொன்ற உமா மகேஸ்வரனின் சாவுக்காக எந்த மனந்தான் சலனப்ப டும்?

## புரட்சி எப்படி...?

★ *இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுக்க பலாத்கா ரமா? சாத்வீகமா?*

● 'இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுப்பது' உட்பட எல்லா சமூக, பொருளாதார சமத்துவத்துக்கும் அவசியமானது அரசியல் அதிகாரம். ஏற்கனவே அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஏற்ற தாழ்வான சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் பேசுவதுதான் சாத்வீ கம். ஆனால் ஆளுவது பலாத்காரமாகத்தான்! எனவே அரசியல் அதிகாரத்தை உழைக்கும் மக்கள் கைப்பற்றும் புரட்சியைப் பிரசவிக் கும் மருத்துவச்சி பலாத்காரம்தான்!

★ *அரசியல்வாதிகளைக் குறை கூறுகிறீர்கள். அவர்களை அடக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம்?*

● இப்போதைக்கு அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தலாம். போதிய மக்கள் ஆதரவு இருப்பின் உள்ளூர் அளவில் 'மக்கள் நீதிமன்றங்களில்' வைத்து விசாரித்து தண்டிக்கலாம். மக்களின் முழு ஆதரவும் பெற்று அமைப்பு ரீதியில் திரட்டி புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவும்போது அவர்களை அடக்கி ஒடுக்கி விடலாம். குற்றங்களுக்கேற்ப தண் டனை வழங்குவதோடு மீண்டும் தலையெடுக்காதவாறு புரட்சியைத் தொடர்ந்து நடத்தவும் வேண்டும்.


★ *சமுதாயத்தில் பெண்களின் நிலை மாற்றம் முக்கியமான தல்லவா? பெண்களுக்காக தனியிதழ் வெளியிடலாமே?*

● முக்கியமானது தான். ஆனால் இப்போது பெண்களுக்காகத் தனியிதழ் வெளியிடுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. அவை ஏற்படும் போது நிச்சயம் தனியிதழ் வெளியிடுவோம். அதுவரை இப்போதைய இதழ்களிலேயே உரிய முக்கியத்துவம் அளிப்போம்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



டெல்லியில் வசிக்கும் வங்கதேச அகதிகளான அன்வர் - ருகியா தம்பதியினர். விபச்சாரத் தரகர்கள் ருகியாவின் குடும்ப போட்டோவை மிரட்டி பிடுங்கிச் சென்றனர். போட்டோவைக் காட்டி உறவுக்காரராக நடித்து வங்கதேசத்தில் வசித்த ருகியாவின் தங்கை ஜார்னாவைக் கடத்தி விற்றனர். சமூக சேவகி ஒருவரின் குறுக்கீட்டால் ஜார்னா





படிப்பகம்

www.padippakam.com

# வங்கதேச அகதிகள் விபச்சாரத்துக்குவிற்பனை! டெல்லிபோலீசு உடந்தை!

ஆயுத வியாபாரத்திலிருந்து சதை வியாபாரம் வரை அனைத்திலும் போட்டி போட்டுக்கொண்டு தரகு வேலை செய்கிறது இந்திய ஆளும் கும்பல். இந்திய மக்கள் மட்டுமல்ல; அண்டை நாட்டு மக்களும் அதன் இரும்புப் பிடியிலிருந்து தப்ப முடிவதில்லை. பாதுகாப்புத் துறையில் இருக்கும் உயர் ராணுவ அதிகாரிகள் ஆயுத பேரத்தில் தரகு வேலை பார்க்கின்றனர். உள்ளூர் போலீசு சதை வியாபாரத்தில் தரகு வேலை பார்த்து தொப்பையை வளர்க்கிறது. தலைநகர் டில்லி போலீசு இதில் கொடி கட்டிப் பறக்கிறது. வங்க தேசத்திலிருந்து பிழைக்க வந்த அகதிகளை ரகசிய உலக கிரிமினல் பேர்வழிகளுக்கு கூட்டிக் கொடுக்கிறது.

வங்கதே[illegible] ஆட்சியிடமிருந்து தப்பி சட்ட விரோதமாக இந்தியாவினுள் குடியேறிய அகதிகள் இவர்கள். டில்லியில் மட்டும் இவ்வாறு ஏறக்குறைய 13,000 பேர் வசிக்கின்றனர். அனைவரும் கூலி ஏழை முஸ்லீம்கள். பழைய டில்லி, யமுனை ஆற்றங்கரையில் மைல் கணக்கில் நீண்டிருக்கும் தார்பாய், தகர டின் வேய்ந்த குடிசைகளில் வாசம் செய்யும் தினக்கூலிகள். பெரும்பாலோர் ரிக்ஷா இழுத்து, சுமை தூக்கிப் பிழைக்கின்றனர். குழந்தைகளுக்குக் கூட ஒரு துணி வாங்கித் தர முடியாத அளவு கடுங்குளிரிலும் வயிற்றுப் பசியிலும் வாழ்பவர்கள்.

ஏறக்குறைய ஒரு டஜன் மிகப்பெரும் விபச்சாரத் தரகு கும்பல் டில்லியில் இயங்குகிறது. இவர்களுக்குக் கீழ் சுமார் 90 விபச்சாரத் தரகர்கள் உள்ளூரில் மேய்வதாக சமூக சேவகி சரளா மத்கல் கூறுகிறார். 20 ஆண்டுகளாக இக்கொடுமைகளுக்கு எதிராக, தனி ஒருவராக துணிவுடன் போராடி வரும் செயல்வீரர் இவர்.



காசீம் காப்பூலிதின் என்ற ஏழை முஸ்லீம் கூறுகிறார். ''பல ஆண்டுகளாக நான் இங்கு வாழ்கிறேன். ஓராண்டுக்கு முன் வழக்கம்போல ரிக்ஷா மிதித்துவிட்டு மாலை வீடு திரும்பினேன். அப்போது என் மனைவி மீனுவைக் காணவில்லை. சலீம் என்ற 'தலால்' (விபச்சாரத் தரகன்) என் மனைவியைப் பகலில் மிரட்டிக் கொண்டிருந்ததாக அக்கம் பக்கத்தார் சொன்னார்கள். அவன் மீனுவை எங்கு கொண்டு போனான் என்பது அல்லாவுக்குத் தான் வெளிச்சம்! நான் கொடுத்த புகாரை போலீசு வாங்க மறுத்து விட்டது. ஓராண்டு காத்திருந்து விட்டு இப்போது இன்னொரு திருமணம் செய்து கொண்டேன்'' என்கிறார்.

தாயை இழந்து அநாதையாக வசிக்கும் ரஷ்மான் என்ற சிறுவன் கூறுகிறான். ''என்னையும் அம்மாவையும் பாகிஸ்தானுக்கு அழைத்துச் சென்றார்கள். கராச்சி ரயில் நிலையத்தில் என்னை தனியாக நிறுத்தி விட்டு உணவு வாங்கித் தருவதாக அம்மாவை கூட்டிச் சென்றார்கள். அதன்பிறகு நான் அம்மாவைப் பார்க்கவேயில்லை'' என்று அழுகிறான்.

யமுனா சேரி - கிழக்கு டில்லியில் இந்த சேரிப்பகுதி தான் விபச்சாரத் தரகர்கள், போலீசு குண்டர்களின் சொர்க்கலோகம்.

வங்க தேசத்திலிருந்து தப்பி வருபவர்கள் இங்கு தான் அதிகமாக வசிக்கின்றனர். தினமும் இங்கு புதிதுபுதிதாக வந்து குடியேறும் வங்கதேச ஏழை முஸ்லீம்களை குடும்பம் குடும்பமாக மிரட்டி, பெண்களை அவர்களிடமிருந்து பலவந்தமாகப் பிரித்து பாகிஸ்தானுக்கு கடத்திச் செல்கிறது, ரகசிய உலக கிரிமினல் கும்பல். பெரும்பாலான சமயங்களில் கைக்கு கை மாற்றி அங்கேயே இன்னொரு கிரிமினல் கும்பலுக்கு விற்று விடுகின்றனர்.

பீர்ரோசா, அன்னுல்காசி தம்பதியர்களை 5 பேர் அடங்கிய விபச்சாரத் தரகு கும்பல் மிரட்டியது. அவர்களுடைய 17 வயது மகளை கடத்திச் செல்ல எத்தனித்தது. '86ம் ஆண்டு மே மாதம் 5ந் தேதி அந்த அபலை தம்பதிகள் போலீசில் புகார் செய்தனர். தரியாகஞ்ச் நிலைய போலீசு கும்பல் புகாரை வாங்க மறுத்தது. சமூக சேவகி சரளா மத்கல் நேரிடையாக புகார் கூறியும் போலீசு மசியவில்லை. மாறாக, புகார் கொடுத்த அன்னுல்காசியை கைது செய்து சித்திரவதை செய்து வெளியில் அனுப்பியது. '87ம் ஆண்டு ஆகஸ்டு 31ந் தேதி அவர் மகளைக் கடத்திச் சென்று விட்டது தரகு கும்பல். இதுநாள் வரையில் அச்சகோதரியைப் பற்றி எந்த தகவலும் தெரியாமல் வேதனையில் உழல்கின்றனர் அப்பெற்றோர்.

தப்பி வந்தவர்களைக் கடத்திச் செல்வதோடு நேரிடையாக வங்கதேசம் சென்று ஏழைக் குடும்பங்களை ஆசைக் காட்டி ஓட்டி வருகின்றது இக்கும்பல். தரை வழியாக எல்லையைக் கடந்து, கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு அவர்களை கூட்டி வருகின்றனர். இங்கு வந்தவுடன் உடனடியாக பெண்களை தனியாகப் பிரித்து வெறொரு கிரிமினல் கும்பலுக்கு விற்று விடுகின்றனர். அல்லது உடனடியாக பாகிஸ்தானுக்கு கடத்தி அங்கு விபச்சார கும்பலுக்கு விற்கின்றனர். வழிச் செலவுக்கு, தங்குமிடங்களுக்கு சில நூறு ரூபாய்களை செலவு செய்து அந்த அபலைகளை 5,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை விற்கின்றனர்.

இதற்கு எதிராக பாதிக்கப்பட்ட குடும்பங்களை ஒன்று சேர்த்து அதிகார வர்க்கத்திற்கும், உயர்நீதி மன்றத்திற்கும் பலமுறை மனு கொடுத்தார்கள். பலவித போராட்டங்களை நடத்தினார்கள். துயரம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. வெளிப்படையாக போலீசு கும்பல், கிரிமினல் கும்பலிடம் மாமூல் பெறுகிறது. கிரிமனல் கும்பல், பகிரங்கமாக, அச்சேரிகளை மேய்ந்து கொண்டு ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறது. உள்ளூர் போலீசுக்காரன்களோ அந்த அபலைகளை வைத்து நிரந்தரமாக விபச்சார விடுதிகள் நடத்துகின்றனர். கிரிமினல்களை அதற்கு பினாமிகளாக நியமிக்கின்றனர்.

நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கும் அபலைகளுக்கு இப்படி அவமானம் இழைப்பது நம் நாட்டிற்கே மிகப்பெரும் அவமானமாகும். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசத் துரோகிகளிடமும், சொந்த மக்களையே கற்பழிக்கும் போலீசு கிரிமினல்களிடமும் நாடு இருக்கும் வரை இந்த அவமானத்தை நாம் துடைக்க முடியுமா?

● குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர இயக்கத்திலே ஒரு பெரிய பலவீனம் இருக்கிறது. 'அரசு'க்கு எதிரான போராட்டங்கள்- இயக்கங்கள், குறிப்பாக போர்க்குணமிக்கவை எதுவானாலும் போதும்; அவற்றிலே ஏதோ புரட்சிகர அம்சங்கள் இயல்பாகவே இருப்பதாக இவர்களாகவே கற்பித்துக் கொள்கிறார்கள்; அவற்றை அனுதாபம், ஆதரவு, உற்சாகம், உத்வேகத்தோடு வரவேற்று விடுகிறார்கள்.

அப்படிப்பட்ட போராட்டங்கள் - இயக்கங்களின் கோட்பாடு - சித்தாந்தம் என்ன? இலட்சியம், கொள்ளை என்ன? வழிமுறைகள், பின்னணி என்ன? இவற்றை சிறிதேனும் ஆழமாய்ப் போய்ப் பார்க்க மறுத்து விடுகிறார்கள்.

'அரசு'க்கு எதிராக, அல்லது அரசிடம் ஏதாவது கோரிக்கைகள் வைத்துத் துவங்கப்பட்ட அப்போராட்டங்கள் - இயக்கங்கள் பலதடவை திசை திரும்பி சாதாரணமான, சம்பந்தமே இல்லாத மக்களுக்கு எதிரானவையாக மாறிவிடும் போதுகூட அவற்றை ஏதாவது ஒரு வகையில் நியாயப்படுத்தவே முயலுகிறார்கள்.

இதற்கு - அஸ்ஸாம், பஞ்சாப் போராட்டங்கள்; தனித் தமிழ்நாடு கோரும் தமிழரசன் குழு, இட ஒதுக்கீடு கோரும் வன்னியர் சங்கம்; பல்வேறு ஈழப் போராளி அமைப்புகள், ஜே.வி.பி.- ஜனதா விமுக்தி பெரமுனா (மக்கள் விடுதலை முன்னணி) என்று இப்படி ஏராளமான உதாரணங்கள் கூற முடியும்.

பல புரட்சியாளர் - குழுக்களிடையே காணப்படும் இந்தப் பலவீனத்திற்கு என்ன காரணம்? புரட்சிகர இயக்கம் பின்னடைவு, பிளவு என்று தேக்கத்தில் நீடித்திருக்கும் போது இப்படியாவது போர்க்குணமிக்க இயக்கங்கள், போராட்டங்கள் இருக்கின்றனவே என்கிற சுயதிருப்தி- ஆறுதல் அணிகளிடையே நிலவுகிறது.

பல புரட்சிகரக் குழுக்களின் தலைமைக்கோ, பல்வேறு இயக்கங்கள்- போராட்டங்களை ஆய்வு செய்து தெளிவான கணிப்புக்கு வர இயலாமை உள்ளது. அதற்குப் பதிலாக வெறுமனே செய்திகளைப் பரிமாறிக் கொண்டு, 'புரட்சிகர அரட்டை'யில் ஈடுபட்டு அவை பற்றிய பிரமைகளை உருவாக்குகின்றனர்.

இதிலே மேலும் மோசமானது என்னவென்றால் சரியான விமர்சனக் கண்ணோட்டம் வைப்பவர்களைப் பார்த்து, "இவர்கள் இப்படித்தான் எல்லோரையும் குறை கூறுவார்கள். ஏதாவது முத்திரை குத்துவார்கள்" என்று சாடி தமது இயலாமையை அவர்கள் மூடி மறைத்துக் கொள்கிறார்கள். இப்படித்தான், குறிப்பாக ஈழப் போராளி அமைப்புகள் மற்றும் ஜே.வி.பி. பற்றி எந்தவிதக் கணிப்புமே முன் வைக்காது ஆண்டுக்கணக்கில் ஈழ - இலங்கை விவகாரங்களை அவர்கள் அலசுகிறார்கள்.

எனவே தான் ஜே.வி.பியை ஒரு இனவாத, சமூக பாசிச இயக்கம் என்று நாம் கூறுவது ஏதோ முத்திரை குத்துவது என்று மெத்தனமாக இருக்கிறார்கள் அல்லது எதிர்க்கிறார்கள். இருந்தாலும் கடந்த 22 ஆண்டுகளில் இலங்கை அரசியலின் முக்கிய சக்தியாக வளர்ந்துவிட்ட ஜே.வி.பியின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இருந்து பாரிய படிப்பினைகள் பெற வேண்டியது புரட்சிகர இயக்கத்தின் கடமையாகும். ஏனெனில் ஜே.வி.பி. என்பது இலங்கைக்கு மட்டுமே இருக்கக்கூடிய விசேடமானதொரு விவகாரம் அல்ல. எல்லா நாடுகளிலும் புரட்சிகர இயக்கங்களின் கூடவே தோன்றி அவற்றைத் திசை திருப்பிவிடும் மிகவும் ஆபத்தான அராஜக அரசியல் சீரழிவுப் போக்காகும்.

# ஜே.வி.பி. இயக்கம் தரும் படிப்பினைகள்!

ஜே.வி.பி.யை நிறுவித் தலைமையேற்று வழி நடத்தியவர் ரோகண விஜியவீரா என்ற அனைவரும் அறியும் பட்டபெண்டிடான் நந்தசிரி விஜியவீரா. இலங்கையின் 'இடதுசாரி' இயக்கங்களின் இதயமாக தெற்கில் உள்ள மாத்தரா மாவட்டம் தங்கெல்ல பகுதியின் கொட்டகோடா கிராமத்தில் 1943 ஜுலை 14ந் தேதி பிறந்தார். அவரது தந்தை உறுப்பினராக இருந்த இலங்கை கம்யூனிஸ்டுக்கட்சியில் பள்ளி மாணவராயிருந்த போதே இணைந்தார். அலியன் நானயக்காரா என்ற கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளருக்குத் தேர்தல் பணிபுரிந்தார். அவரது உதவியால் 1960ல் உதவித் தொகை பெற்று மாஸ்கோவில் உள்ள சர்வதேச மக்கள் நட்புறவு- பாட்ரீஸ் லுமும்பா பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி படிக்கப் போனார். அப்போது சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது.

1963-இல் விடுமுறைக்காக தாயகம் திரும்பிய விஜியவீரா சீன ஆதரவு கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிப்பதாக ருஷ்ய அரசு அறிந்தது. எனவே அவர் மாஸ்கோ திரும்பி தனது படிப்பைத் தொடர அனுமதி மறுத்து விட்டது. 1965ல் சண்முகதாசன் தலைமையிலான 'சீன ஆதரவு' கம்யூனிஸ்டு கட்சியின் முழுநேர ஊழியரானார், விஜியவீரா. உடனே இளைஞரணியின் பொறுப்பாளராக்கப் பட்டதால் நாடு முழுவதுமான கட்சியின் தீவிர இளைஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. சண்முகதாசன் கட்சி நிதியைக் கையாடல் செய்யும் ஒரு தொழிற் சங்கவாத - பிழைப்புவாதி; மார்க்சிஸ்டு அல்ல என்ற முடிவுக்கு ரோகண விஜயவீரா வந்தார். எனவே சனத், கருணரத்னே, லோகு அதுலா போன்ற பல்வேறு மட்டப் பொறுப்பாளர்களாகக் கொண்ட இரகசியக் குழுவைக் கட்சிக்குள்ளேயே உருவாக்கினார். இதை அறிந்த சண்முகதாசன் ரோகண விஜிய வீராவையும், அவரது ஆதரவாளர்களையும் கட்சியை விட்டு வெளியேற்றி விட்டார்.

1970 ஆகஸ்டில் கொழும்பு ஹைடே பூங்கா பேரணியில் தான் ஜே.வி.பி. அமைக்கப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 1966 ஏப்ரல் - மேயிலேயே விஜிய வீராவைப் பொதுச் செயலாளராகக் கொண்ட இரகசியக் கட்சியாக அமைத்து கிளைகளை உருவாக்கத் துவங்கி விட்டிருந்தனர். பொருளாதார நெருக்கடி, இலங்கையின் சுதந்திரம், இந்திய விரிவாக்கம், இலங்கை இடதுசாரி இயக்கம், இலங்கைக்கான புரட்சிப்பாதை ஆகிய ஐந்து வகுப்புகள் அணிகளிடையே நடத்தப்பட்டன. அவற்றில் ஜே.வி.பி.யின் அரசியல், இராணுவப் பாதைகள் பற்றிய நிலைப்பாடுகளை முன் வைத்தனர்.

★ இலங்கையின் காலனிய, நவகாலனிய முதலாளித்துவ அமைப்புதான் அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படை. குறிப்பாக இந்தியத் தொழிலாளர்களை வைத்து தேயிலை- ரப்பர் தோட்டங்களை அமைத்து சிங்கள விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி விட்டனர். எனவே அவற்றை அழித்து சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்து கூட்டுடமை விவசாய - தொழிலை நிறுவ வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோசலிச சமுதாயத்தைப் படைப்பதன் மூலமே அது சாத்தியம்.

★ இந்திய மூலதனம், குறிப்பாக சிந்தி, போரா மற்றும் தமிழ் வியாபாரிகள் நடத்தும் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம் தான் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. அதோடு கலாச்சார ரீதியிலான ஊடுருவல் மற்றும் இந்தியத் தமிழர்களின் 'தாயக' விசுவாசம் ஆகியவற்றைக் கொண்டு இனப்பிரச்சினையைத் தூண்டி இந்தியா தனது விரிவாக்க, ஆதிக்க நோக்கங்களுக்குப் பயன்படுத்தகிறது.

★ ஏற்கனவே அமைப்பு ரீதியில் திரட்டப்பட்டுள்ள நகர்ப்புற மற்றும் மலையகத் தொழிலாளர்கள் புரட்சிக்கு முன்வர மாட்டார்கள். எனவே கிராமப்புற பாட்டாளிகள், இளைஞர்கள், மாணவர்களைக் கொண்டு சே குவாராவின் கியூபா பாணியிலான ஆயுதப் புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.

மேற்கண்ட அடிப்படையில் கட்சி அமைப்புகளைக் கட்டவும், புரட்சிக்குத் தயாரிக்கவும் பொறுப்புகள் ஒப்படைக்கப் பட்டன. முக்கியமாக பள்ளி, கல்லூரி பல்கலைக் கழகங்களில் தேஷ்பிரின் சிஸ்ய சங்கமாயா என்ற மாணவர் அமைப்பும் தேஷ்பி



படிப்பகம்

www.padippakam.com

ரேமி பிக்கு பெரமுனா என்ற புத்த சாமியார் அமைப்பும் கட்டப்பட்டன.

கோட்பாடு முற்றும் பிரச்சாரப் பணியை விஜிய வீரா ஏற்றார். தொழிலாளர், மாணவர், பெண்கள் மற்றும் பிக்குகளை அமைப்பாகத் திரட்டும் பணி சணத்துக்கும். ஆயுதங்களை சேகரிக்கும் பணி லோக்கு அதுலாவும் ஏற்றனர். ஒரு லட்சம் வெடி குண்டுகளும், துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும் சேகரிப்பது. ஒரு குறிப்பிட்ட நாளில் போலீசு நிலையங்கள் அனைத்தையும் தாக்கிக் கைப்பற்றுவது என்று திட்டமிட்டு தயாரிப்புகளில் ஈடுபட்டனர்.

''நாசவேலை, ஆட்சிக்கவிழ்ப்புக்கு'' ஜே.வி.பி. தயாரிப்பதாக உளவறிந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு ரோகண விஜிய வீராவை 1970 ஆரம்பத்தில் கைது செய்தது. அப்போது வந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் போலி சோசலிச மற்றும் போலி கம்யூனிசக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து வெற்றி பெற்ற சிரிமாவோ பண்டாரநாயகா கூட்டணி அரசு அமைந்தது. தேர்தலில் சிரிமாவோ கூட்டணியை ஜே.வி.பி. ஆதரித்து வேலை செய்திருந்தது. எனவே 1970 ஜூலையில் ரோகண விஜிய வீரா விடுதலை செய்யப்பட்டார்.

உடனடியாக நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆயுதப் புரட்சிக்கான ஆதரவு திரட்டினார், விஜிய வீரா. போலீசு நிலையங்களைத் தாக்கிக் கைப்பற்றுவது; சிரிமாவா பண்டாரநாயகாவைக் கடத்துவது அல்லது கொன்று விடுவது; இதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்றும் இந்தப் புரட்சிக்கான நாளாக 1971 ஏப்ரல் 8ந்தேதி குறிக்கப்பட்டது.

ஆனால் 1971 மார்ச்சு 10ந் தேதி வெடி குண்டுகள் தயாரித்துக் கொண்டிருந்த போது வெளிமாடா, நெலுன்தேனியா ஆகிய இடங்களில் குண்டுகள் வெடித்து விபத்துக்கள் நடந்தன. 5 இளைஞர்கள் மாண்டனர். அதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு கொழும்பு அமெரிக்கத் தூதரகத்தை ஜே.வி.பி. தாக்கியதில் ஒரு போலீசு அதிகாரி கொல்லப்பட்டார். அடுத்த வாரம் பெரதேனியா பல்கலைக் கழக விடுதியில் ஒரு குண்டு வெடித்தது. அங்கு சோதனையிடவே ஏராளமான ஆயுதங்களும் வெடி பொருட்களும் சிக்கின.

எச்சரிக்கை அடைந்த போலீசு 1971 மார்ச்சு 13ந் தேதி ஐந்து பேரோடு சேர்த்து மீண்டும் விஜிய வீராவைக் கைது செய்தது. உடனடியாகப் புரட்சியை நடத்தி அதிகாரத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று ஒரு பிரிவினர் கட்சிக்குள் நிர்ப்பந்திக்கத் துவங்கினர். ஏப்ரல் 2ந்தேதி வித்யோதயா சங்கரமாயாவில் கூடியே ஜே.வி.பியின் அரசியல் தலைமைக்குழு புரட்சிக்கான தேதியை முன் தள்ளியது. 1971 ஏப்ரல் 5-ந் தேதி இரவு 11 மணிக்கு தாக்குதலைத் தொடுப்பது என்றும் 500 பேர் கொண்ட படை அனுப்பி விஜிய வீராவை விடுவிப்பது என்றும் தீர்மானமானது. வெற்றியைப் பிரகடனம் செய்யும் வானொலி உரைகூட தயாராகி விட்டது.

ஆனால் புரட்சியைத் துவங்குவதற்கான தகவல்கள் சரியாக போய்ச் சேரவில்லை. ஏப்ரல் 5ந் தேதி அதிகாலை 5 மணிக்கே வெள்ளிவாயா போலீசு நிலையத்தைத் தாக்கி 2 போலீசாரைக் கொன்றனர். 2 ஜே.வி.பியினரும் மாண்டனர். உடனடியாக 5 மாவட்டங்களில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு போலீசு எதிர்நடவடிக்கைகளில் இறங்கி விட்டது. அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே நாட்டில் அவசரநிலை பிறப்பித்திருந்தனர்.

சிரிமாவைக் கொல்வது அல்லது கடத்துவது; விஜிய வீராவை விடுவிப்பது ஆகிய இரண்டு முயற்சிகளும் தோற்றுப் போயின. ஆனால் ரெயில் மற்றும் சாலைப் போக்குவரத்துகள், செய்தித் தொடர்புகள், மின் இணைப்புகள் ஆகியவற்றைத் துண்டித்து முற்றாகச் செயலிழக்கச் செய்வதில் ஜே.வி. பியினர் வெற்றி பெற்றனர். 92 போலீசு நிலையங்களை தாக்கி 56ஐ நாசப்படுத்தினர்; 32ஐத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 43ஐ கைவிட்டு போலீசார் ஓடிவிட்டனர். 305 போலீசுகாரர்களும், 63 சிவிலியன்களும் கொல்லப்பட்டனர்.

இந்த ஆரம்பநிலை வெற்றிக்குப் பிறகு இராணுவம் எதிர்த் தாக்குதல் தொடுத்தது. இந்தியாவும் இங்கிலாந்தும் இராணுவத்தை அனுப்பின. ருஷ்யா, ஆஸ்திரேலியா, யுகோஸ்லாவியா ஆகியன ஆயுத உதவிகள் அனுப்பின. 17 நாட்களில் ஜே.வி.பியின் புரட்சி முற்றாக ஒடுக்கப்பட்டது. ஏப்ரல் 22ந்தேதி கடைசியாக அதன் கட்டுப்பாட்டில் இருந்த எல்பித்தியா பிராந்தியம் வீழ்ந்தது.

மொத்தம் 1200 ஜே.வி.பியினர் கொல்லப்பட்டதாக, சரணடைந்த 4200 பேர் உட்பட 23,000 பேர் கைதாகியதாக அரசு அறிவித்தது. ஆனால் ஏறக்குறைய 20,000 இளைஞர்கள் (அவர்களிலே 90 சதவிகிதத்தினர் 18 - 25 வயதினர்) கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமற்ற தகவல். 32 பேர் சதிக் குற்றத்தின் கீழ் ஆயுள் தண்டனை பெற்றனர். 15,000 பேர் வழக்கின்றியும், மீதிப்பேர் படிப்படியாகவும் விடுவிக்கப்பட்டனர். அவர்களும் 1975 வரை போலீசின் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். அனைவருக்கும் அரசு வேலைகள் நிரந்தரமாக மறுக்கப்பட்டது. ஏறக்குறைய செயலிழந்த நிலைக்கு ஜே.வி.பி. தள்ளப்பட்டாலும் நீறு பூத்த நெருப்பாக இருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

ஜே.வி.பி. நடத்திவரும் விளக்குக் கம்ப கொலைகளில் ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com



## திருச்சி நேரு சிலை தஞ்சை நினைவுத் தூண் தகர்ப்பு:

## போலீசின் சதி அவதூறு அட்டூழியங்களை

திருச்சி நேரு சிலை உடைப்பு சம்பவத்தை ஒட்டியும், தஞ்சையில் நினைவுத் தூண் தகர்ப்பை ஒட்டியும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக பொய்ச் செய்திகளைப் பரப்பியும், தோழர்கள் பலரைக் கைது செய்து சித்திரவதையும் வீடு புகுந்து சூறையாடலையும் போலீஸ் கும்பல் செய்து வருகிறது. இதுதவிர தமிழகமெங்கும் ம.க.இ.க.; வி.வி.மு. அமைப்புகளின் முன்னணியாளர்களை போலீசார் விசாரணை என்ற பெயரில் பீதியூட்டி மிரட்டி வருகின்றனர். புரட்சிகர இயக்கங்களை ஒடுக்கும் நோக்குடன் போலீசு கும்பல் மேற்கொண்டுள்ள சதி நடவடிக்கைகள்- வெறியாட்டங்களை எதிர்த்தும், தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் தமிழகமெங்கும் ம.க.இ.க.வும், வி.வி.மு.வும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன. சுவரொட்டி, துண்டுப் பிரசுரம், தெரு முனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டம் என பிரச்சார இயக்கம் முனைப்புடன் நடைபெற்று வருகிறது. தோழமை அமைப்பான மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் இவ்வியக்கத்துக்கு ஆதரவாக சுவராட்டி இயக்கத்தை நடத்தியது.

★ சென்னையில் மைய ரீதியில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் தெருமுனைக் கூட்டங்கள் மூலமாகவும் போலீசின் சதி நடவடிக்கையையும், அட்டூழியங்களையும் எதிர்த்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. தஞ்சையில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோரைப் பாதுகாக்கும் போலீசு கும்பலைத் தட்டிக் கேட்ட ம.க.இ.க. தோழர்களைப் பழிவாங்கும் வெறியுடன் இப்போது கைது செய்து வீடுபுகுந்து சூறையாடுவதை அம்பலப்படுத்தி பேசிய போது மக்கள், இது உண்மைதான் என்று வெளிப்படையாக ஆமோதித்தனர். தோழர்களை விடுதலை செய்யக்கோரி சென்னை ம.க.இ.க.வின் சார்பில் தொடர்ந்து சுவரொட்டி பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ திருவோணம் ஒன்றிய வி.வி.மு. சார்பில் தோழர்களை விடுதலை செய்யக்கோரியும் போலீசின் அராஜகத்தை எதிர்த்தும் கண்டன பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர்கள் சிவாஜி நடராஜன், இராம. துரை மாணிக்கம் இமயவரம்பன் ஆகியோர் போலீசின் அராஜகத்தைக் கண்டித்து உரையாற்றினார். திருவோணம், பட்டுக்கோட்டை வட்டாரங்களில் பரவலாக சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

## வையம்பட்டி துப்பாக்கிச் சூடு: கிரிமினல் போலீசு அதிகாரத் திமிர்!

வையம்பட்டி, திருச்சி —திண்டுக்கல் சாலையில் திருச்சியிலிருந்து 60 கி.மீ. தூரத்தில் இருக்கும் ஊர். டிசம்பர் 14ந் தேதி இங்கு போலீசு துப்பாக்கி சூட்டில் ஒருவர் அதே இடத்தில் இறக்க 5 பேர் குண்டு காயங்களுடன் மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர்.

காரணம் இதுதான். வையம்பட்டி போலீசு நிலையத்திற்குப் பின்னால், மரத்தில் 40 அடி உயரத்தில் ஒருவர் பிணமாக தொங்கினார். தன் கண் எதிரில் இருக்கும் பிணத்தை போலீசு சட்டை செய்யவில்லை. தொடர்ந்து 3 நாட்களாக அப்பிணம் மரத்திலேயே தொங்கி அழுகி நாற ஆரம்பித்தது.

பிணத்தை அகற்றி விசாரிக்குமாறு ஊர் மக்கள் போலீசுக்கு புகார் கொடுத்தனர். கண்ணெதிரில் தொங்கும் பிணத்திற்கு ஊர்மக்கள் புகார் கொடுத்த பிறகும் போலீசு பிணத்தை அகற்றவில்லை.

முதல் மந்திரி முதல் திருச்சி கலெக்டர் வரை அனைவருக்கும் ஊர் மக்கள் தந்தி கொடுத்தனர். எதுவும் நடக்கவில்லை. மரத்தில் தொங்கிய பிணம் அப்படியே கிடந்தது.

இதற்கிடையில் மணப்பாறை தாசில்தாரை வைத்துக் கொண்டு உள்ளூர் போலீசு 13ந் தேதி பிணத்தை இறக்க முயற்சித்தது. இவ்வளவு நாள் பிணத்தை அகற்றாததற்கு ஊர் மக்கள் விளக்கம் கேட்டனர்.

'போலீசுதான் இக்கொலையை செய்திருக்கிறது. அதை மறைக்கத்தான் இப்படி நாடகமாடுகிறது' என்று தாசில்தாரிடம் புகார் கூறினார்கள். தாசில்தார் அதை காதில் போட்டுக் கொள்ளாமல், பிணத்தை இறக்க அனுமதி கொடுத்தவுடன் மக்கள் எதிர்த்தனர்.

'திருச்சியில் இருந்து உயர் போலீசு அதிகாரிகள் வந்தபிறகு அவர்கள் முன்னிலையில் தான் பிணத்தை இறக்க வேண்டும்' என்று தடுத்தனர். வெறிகொண்ட போலீசு சுற்றியிருந்த 1000க்கும் மேற்பட்ட மக்களை தடியால் அடித்து கலைக்க முயற்சித்தது. மக்கள் உறுதியுடன் நின்று எதிர் தாக்குதல் தொடுத்தனர். பிணத்தை இறக்க முயற்சித்தவர்களை கல்லால் அடித்தனர். வெறிகொண்ட போலீசு மக்களை குண்டுகளால் தாக்கியது.

25 வயதான கட்டிடத் தொழிலாளி ஆரோக்கியசாமி தொண்டையில் குண்டு பட்டு அதே இடத்தில் இறந்தார். மேலும் 5 பேர் குண்டு காயங்களுடன் மருத்துவம

## அப்போலோ டியூப்ஸ்: தொழிலாளர்களின் அவலம்! அக்கறையற்ற அரசு!

இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் உள்ள பெரிய ஆலைகளில் அப்போலோ டியூப்ஸ் நிறுவனமும் ஒன்று. இதில் பணியாற்றும் 600க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 11.10.89 முதலாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்த ஈராண்டுகளாக தொழிலாளர்களுக்குப் போனஸே தராமல் ஏய்த்து வருகிறது. இதுதவிர ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தும் கருங்காலிகளை வைத்து ஒன்றுபட்ட சங்கத்தைப் பிளவு படுத்தவும் நிர்வாகம் சதி செய்கிறது.

இந்நிலையில் இவ்வாண்டும் போனஸ் தராமல், வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதைக் காரணம் காட்டி நிர்வாகம் ஏமாற்றியது. எனவே நிர்வாகத்தின் அயோக்கியத்தனத்தை எதிர்த்தும், சட்டப்படி தர வேண்டிய போனசை உடனே வழங்கக் கோரியும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

போராட்டத்தில் ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் ஒரு வாரத்திற்கும் மேல் உறுதியாக நிற்கத் தொடங்கியதும், நிர்வாகம் நூற்றுக்கணக்கான போலீசாரை ஆலை வாயிலில் குவித்து பீதியூட்டியது. ஆனாலும் தொழிலாளர்கள் உறுதியாகப் போராடியதால், சில கருங்காலிகளைக் கொண்டு ஆலையை இயக்க முயற்சித்து வருகிறது.

நிர்வாகத்தின் அச்சுறுத்தல்களை பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்த தொழிலாளர்கள், தமிழக அரசைத் தலையிடக் கோரி கடந்த 30.10.89 முதலாக இராணிப்பேட்டை ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு 20 தொழிலாளர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். ஏறத்தாழ ஒரு வார காலம் உண்ணாவிரதமிருந்து நிலைமை மோசமாகி 6 தொழிலாளர்கள் வாலாசா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆனாலும் கருணாநிதி அரசு ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எம்.ஜி.ஆர். சமாதியை பல லட்சரூபாய் செலவில் திறந்து வைத்தும், நடிகர் - நடிகைகளுக்கு அரசு சார்பில் பரிசும் பாராட்டும்



படிப்பகம்

www.padippakam.com



# எதிர்த்து பிரச்சார இயக்கம்

12.12.89 அன்று நண்பகலில் பட்டுக்கோட்டையில் மணிக்கூண்டு அருகிலிருந்து வி.வி.மு.வின் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டு பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன்பு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் போலீசின் சதிகள் அம்பலப்படுத்தப் பட்டதோடு, கைது செய்த தோழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டுமென விண்ணதிரும் முழக்கங்களால் வலியுறுத்தப்பட்டது. புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க போலீஸ் கும்பல் கையாளும் சதி மற்றும் காட்டுமிராண்டித் தனங்களை மக்கள் மத்தியில் திரை கிழிக்கும் வகையில் வி.வி.மு.வின் பிரச்சார இயக்கம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

★ மதுரையில் ம.க.இ.க.வின் சார்பில் தோழர்களை விடுதலை செய்யக் கோரி பேருந்துகளில் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. முக்கிய இரு பகுதிகளில் விளம்பரத்தட்டி எழுதி வைத்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் போலீசின் அயோக்கியத் தனங்களை அம்பலப்படுத்தி பிரச்சாரம் இயக்கம் நடத்தப் பட்டது

இதே போல சமயநல்லூரிலும் பிரசுரம், சுவரொட்டி விளம்பர தட்டி மூலம் தோழர்களை விடுதலை செய்யக் கோரி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஊற்றங்கரையில் புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சுவரொட்டிகள், விளம்பரத் தட்டி, பிரசுரம் மூலம் போலீசின் சதிகளை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்தது.

★ கடலூரில் ம.க.இ.க.வும், திருவெண்ணைய் நல்லூர் ஒன்றிய வி.வி.மு.வும், வடலூர் - நெய்வேலி தொழிலாளர் பிரச்சார குழுவும் இணைந்து தோழர்களை விடுதலை செய்யக் கோரி எழுச்சிமிகு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தின. 4.12.89 அன்று காலை 10 மணியளவில் திருப்பாப்பூலியூர் அஞ்சல் பிரிப்பக அலுவலகத்தின் அருகிலிருந்து போலீசின் சதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து விண்ணதிர முழக்கங்களுடன் புறப்பட்ட ஊர்வலம் மஞ்சகுப்பம் தண்ணீர் தொட்டியை வந்தடைந்தது. ஊர்வலத்தின் முடிவில் கல்லை வட்ட வி.வி.மு. தோழர் நாகராசன்; தி.வெ.நல்லூர் வி.வி.மு. தோழர் நாராயணன், கடலூர் ம.க.இ.க. தோழர் கலாநிதி ஆகியோர், புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க அரசு எந்திரம் மேற்கொண்டு வரும் எத்தணிப்புகளைத் தோலுரித்துக்காட்டி சிறப்புரை யாற்றினர். இறுதியில் ''ஏழை மக்களைப் பாதுகாக்க போலீஸ் இருக்குதா?'' என்ற பாடலை தோழர்கள் பாடிய போது மக்கள் வெகுவாக வரவேற்று ஆதரித்தனர். கைதான தோழர்களை விடுதலை செய்யக் கோரி சுவரொட்டி, பிரசுரங்கள் மூலம் தொடர்ந்து பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.

---

னையில் சேர்க்கப்பட்டனர். அதன்பிறகு அங்கு வந்த திருச்சி நகர கலெக்டரும், டி.ஐ.ஜி.யும் கண் துடைப்புக்காக விசாரணைக்கு உத்திரவிட்டனர்.

வழக்கம்போல் போலீசு, அதிகார வர்க்கத்தின் நரித்தனம் அரங்கேறியது. நிரபராதிகளான புகார் கூறிய மக்களையும், குற்றவாளிகளாக்கி விட்டனர். அப்பகுதியில் ஆயுத போலீசு குவிக்கப்பட்டுள்ளது. போலீசு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கொலை செய்த கைதியை இப்படி மரத்திலும், புதரிலும் போடுவது வையம்பட்டி போலீசுக்கு புதிதல்ல! வையம்பட்டி போலீசு நிலைய சப்-இன்ஸ்பெக்டர் போலீசு நிலையத்தில் வைத்து ஒரு பெண்ணை கற்பழித்த புகார் உட்பட இதற்கு முன் போலீசால் கைது செய்யப்பட்ட 2 பேர் அதன்பிறகு காணவில்லை.

போலீசு, உயர் அதிகார கும்பலின் அக்கிரமத்திற்கு இன்னுமொரு உதாரணம் தான் வையம்பட்டி துப்பாக்கி சூடு!

---

அளித்தும் தேர்தலில் ஒட்டுப் பொறுக்குவதிலேயே அது குறியாய் இருந்தது.

இப்பகுதியின் போலிக் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.வான கே.ஆர்.சுந்தரம் தான் இவ்வாலையின் தொழிற்சங்கத் தலைவராக உள்ளார். ஆளும் கட்சியின் தயவில் எம்.எல்.ஏ. ஆகியுள்ளதால், போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்லாமல் மலட்டுத்தனமான உண்ணாவிரதப் போராட்டத்தில் தொழிலாளர்களை இறக்கி, அவர்களது போராட்ட உணர்வையே காயடித்து விட்டார். முடிவுக்கு வராமல் வேலை நிறுத்தம் தொடர்வதால் தொழிலாளர்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர்.

தகவல்: அரிராமன்

---

# அம்பலப்பட்ட பேராசிரியர் குதிக்கிறார்!

புதிய ஜனநாயகம் இதழ் எண் 4/24-ல் அதிராம்பட்டினம், ஏரிப்புரக் கரையில் தொடங்கப்பட்டுள்ள உப்பள சிகப்புப் பூச்சி திட்டத்தில் பணியாற்றி வரும் பூண்டி - புஷ்பம் கல்லூரி பேராசிரியர் அப்துல் ரகுமானின் ஊழல் கொள்ளையையும் அதிகார முறைகேடுகளையும் தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தியிருந்தோம்.

தனது அயோக்கியத் தனங்கள் மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் அம்பலப்பட்டுப் போனதால் ஆத்திரமும் எரிச்சலும் அடைந்த பேராசிரியர், புதிய ஜனநாயகம் இதழுக்கு தகவல் தந்த தோழர் சந்திரசேகரனுக்கு (விவசாயிகள் விடுதலை முன்னணி, பட்டுக்கோட்டை) ஒரு மிரட்டல் நோட்டீசு விட்டிருக்கின்றனர். இத்தோழர் ஒரு வார காலத்திற்குள் மன்னிப்பு கேட்க வேண்டும்; இல்லையேல் மான நட்ட வழக்கு போடுவேன் என்று 18.11.89ல் எச்சரிக்கை நோட்டீசு அனுப்பியுள்ளார். இதே நோட்டீசை புதிய ஜனநாயகம் ஆசிரியரும் வெளியீட்டாளருமான தோழர் மதியழகனுக்கும், அச்சகத்தாருக்கும் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பிய நோட்டீசில், 'சந்திரசேகரன் தொழில் நுட்ப உதவியாளராகப் பணியில் அமர்த்தப்படவில்லை; இதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது; அவருக்கு நேர்முகத் தேர்வோ, பணியில் சேரும்படியான உத்திரவோ கொடுக்கப்படவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தஞ்சை, பூண்டி - புஷ்பம் கல்லூரியில் நேர்முகத் தேர்வும், வேலை பற்றிய பரிசீலனையும், விவாதமும் நடைபெற்றது. இந்த நேர்காணல் தேர்வும், விவாதமும் பேராசிரியர் அப்துல் ரகுமான் உள்ளிட்டு கல்லூரி முதல்வர், தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விக்டர் ராஜமாணிக்கம், தாவரவியல் துறை பேராசிரியர் ஆகியோர் முன்னிலையிலும், சக ஆராய்ச்சியாளர்கள் 8 பேர் முன்னிலையிலும் நடைபெற்றது. ''இந்து'' பத்திரிகை நிருபர் கணபதியும் இதில் பங்கெடுத்துக் கொண்டார். சந்திரசேகரனை வேலையில் சேர்க்காமல் எப்படி வேலை பற்றிய விவாதத்தில் பங்கெடுக்க அனுமதிக்க முடியும்?

உரிய நேரத்தில் தர வேண்டிய பணியில் அமர்த்தும் உத்திரவை பேராசிரியர் தராமல் ஏமாற்றியதோடு, ஒரு மாத கால ஊதியமான ரூ.950க்குப் பதில் ரூ.725 மட்டுமே கொடுத்து மீதியைச் சுருட்டிக் கொண்டார். இதோடு, மேலும் இருமாத கால ஊதியத்தையும் கொடுக்காமல் பேராசிரியர் விழுங்கி விட்டார்.

சந்திரசேகரன் உட்பட அனைத்து ஆராய்ச்சி மாணவர்களுக்கு சேர வேண்டிய ஊதியத்தை உடனடியாக திருப்பித் தர வேண்டும். ஆராய்ச்சி என்ற பெயரில் கொள்ளையடிப்பதை உடனடியாக நிறுத்தப் பட வேண்டும் என மீண்டும் இப்பேராசிரியருக்கு அறிவுறுத்துகிறோம். இல்லையேல், இவரது பகற்கொள்ளையை மேலும் புதிய ஆதாரங்களுடன் மாணவர்களிடமும் மக்கள் மத்தியிலும் கொண்டு சென்று அம்பலப் படுத்தி முறியடிப்போம்!

— விவசாயிகள் விடுதலை முன்னணி
பட்டுக்கோட்டை வட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# தொழிற்சங்கவாதம் — ஒரு மண் குதிரை!

**ம**லடு தட்டிப்போன தொழிற்சங்க செக்கு மாடுகளை வைத்து தரகு வியாபாரம் நடத்திவரும் போலிக் கம்யூனிஸ்டுகளின் தொடர்ச்சியான துரோகத்தால் ''அரசியலற்ற சங்கம்'', ''தொழிலாளர்களுக்கான சொந்த சங்கம்'' என்ற நிர்கதியான நிலையை எடுக்கும் போக்கு இன்று தொழிலாளர்களிடையே வளர்ந்து விட்டது. இதையே மூலதனமாகக் கொண்டு புதிய வகை தொழிற்சங்க புரோக்கர்களும் அரசியலற்ற சங்கங்களும் தொழிலாளர்களிடையே செல்வாக்கு செலுத்தத் தொடங்கி விட்டன. பம்பாயில் அரசியலற்ற தொழிற்சங்கவாத - பொருளாதாரவாதப் போராட்டங்களையே போர்க்குணத்துடன் நடத்துவதில் தத்தா சமந்த்துக்குப் பிறகு இப்போது ரஞ்சன் நாயர் புதிதாக வந்துள்ளார்.

ஆனால் இப் போராட்டங்கள் எவ்வளவுதான் தீவிரமானதாக இருந்தாலும் இறுதியில், தோல்வியடைபவையாகவும் துரோகமிழைப்பவையாகவும் தான் உள்ளன. புரட்சிகர அரசியலுடன் கூடிய போர்க்குணமும், தொழிற்சங்க - அரசியல் பயிற்சியும், இதர பிரிவு உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டதாகவும் உள்ள புதிய, புரட்சிகர சங்கம் மட்டும் தான் போராட்டத்தை சமரசமின்றி முன்னெடுத்துச் சென்று தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வழிவகுக்கும். இத்தகைய சங்கத்தைக் கட்டியமைப்பது இடர்ப்பாடு நிறைந்ததாக இருந்தாலும், அது ஒன்றுதான் இன்றைய தொழிற்சங்க துரோகிகளுக்கு எதிரானதாக, அவர்களின் கொட்டத்தை அடக்குவதாக அமையும். அண்மையில் பம்பாயில், ரஞ்சன் நாயர் என்ற தொழிற்சங்கவாதியின் தலைமையில் நடந்த ''டெல்கோ'' தொழிலாளர்களின் போராட்டம் இதை மீண்டும் நிரூபித்துள்ளது.

பம்பாய் பெருநகரத்தை ஒட்டியிருப்பது பூனா தொழில் நகரம். பொறியியல் பெருந்தரகு முதலாளிகளின் தொழில் மையம். பிம்பிரி மற்றும் சினச்வாட் அடுத்த அடுத்த தொழிற் பேட்டைகளில் 12,000 தொழிலாளர்களை உள்ளடக்கியது 'டெல்கோ' நிறுவனம். மிகப் பெரும் தரகு முதலாளி டாடாவுக்கு சொந்தமானது. ரத்தன் டாடாவின் நேரடி மேற்பார்வையில் இயங்குவது. லாரி உட்பட ஆண்டுக்கு 30,000 கனரக வாகனங்களை தயாரிக்கிறது. நாளொன்றுக்கு 125 கனரக வாகனங்களின் அச்சுகளை (chasis) தயாரிக்கிறது. '88ஆம் ஆண்டில் மட்டும் அந்நிறுவனத்தின் உற்பத்தி விற்பனை ரூபாய் 1,800 கோடி!

உரையாற்றும் ரஞ்சன் நாயர். பின்னணியில் பிள்ளையார் படம்.



டெல்கோ கம்கார் சங்கத்தனா, (TKS) '68ஆம் ஆண்டில் கம்பெனி நிர்வாகமே உருவாகிய தொழிற்சங்கம். '82ஆம் ஆண்டு வரையில் எந்த ஒரு பெரிய எதிர்ப்பும் இன்றி நிர்வாகத்தின் பினாமி தொழிற்சங்கமாக இயங்கியது. இந்தக் காலத்தில் 'தொழிலாளர்களின் மீது வேலைச் சுமையை இருமடங்காக அழுத்தியது. உற்பத்தியை பூதாகரமாக உயர்த்தியது.

''தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை முழுமையாக பயன்படுத்துவது'' என்று சக்கையாக பிழிந்தெடுத்தது. மரபு வழியிலான தொழிற்சாலை உற்பத்தி முறையை முற்றாக உடைத்து பல குயுக்திகளை புகுத்தியது. 'குழு உற்பத்தி முறை', 'பலதுறை தேர்ச்சி முறை' என்று ஒரு தொழிலாளியை எல்லா பிரிவு வேலைக்கும் துரத்தியது.

நரித்தனமான இந்த வேலைச் சுமைகளுக்கு எதிராக தொழிலாளர்கள் '77ஆம் ஆண்டில் பெரிய அளவில் கிளர்ந்தெழுந்தனர். 'டெல்கோ' வரலாற்றில் 22 நாட்கள் நீடித்து நடந்த இந்த போராட்டம் குரூரமாக ஒடுக்கப்பட்டது. ஏராளமான முன்னணி தொழிலாளர்கள் வேலையிழந்தனர். நீறு பூத்த நெருப்பாக இருந்த தொழிலாளர்களின் வர்க்க கோபம், தீப்பிழம்பாக உருவெடுத்தது. நிர்வாகம் முன்னணித் தொழிலாளர்களை ஒருபுறம் கடுமையாக ஒடுக்கிக் கொண்டே மறுபுறம் தொழிலாளர் நலத் திட்டங்களை அடுத்து அடுத்து அறிமுகப்படுத்தியது.

'டெல்கோ' உற்பத்தியைச் சார்ந்த பல துணைத் தொழில்களை தொழிலாளர்களே கூட்டுறவு முறையில் துவங்கி நடத்த உதவியது. அதன் பணியிடங்களுக்கு தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமைக் கொடுக்கப் போவதாக அறிவித்தது. கடைசியில் இவையெல்லாம் தொழிற்சங்க தலைமைக்கும், கருங்காலிகளுக்கும் உபரி வருமானத்திற்கான ஊற்று மூலமாக அமைந்தது. நிர்வாகத்தின் கணக்கு வெற்றியடைந்தது. ஒரு புதுவகையான கருங்காலி கும்பலை, தொழிற்சங்கத்துக்கு வெளியே நிர்வாகம் திரட்டியது.

வேலைச் சுமையை ஏற்றுக் கொண்டு அற்ப சம்பள உயர்வை பெற்றுத் தரும் தொழிற்சங்க தலைமைக்கு எதிராக '82ல பெரும்கலகம் செய்தனர் தொழிலாளர்கள். ஒப்பந்தத்தில் கைச்சாத்தி விட்டு வாயிற் கூட்டத்திற்கு வந்திருந்த துரோகத் தலைவர்களை தொழிலாளர்கள் சரமாரியாக கல்லால் அடித்தார்கள். சுற்றி வளைத்துக் கொண்டு தலைவர்களை நையப் புடைத்தார்கள். அப்போதுதான் ரஞ்சன்நாயர் தொழிலாளர்களுக்கு அறிமுகமானார். தொழிற்சங்க நிர்வாகிகள் சங்கத்தில் அவரும் ஒரு உறுப்பினராக இருந்தார். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்காக தொழிலாளர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோரினார். துரோகியை பொறுப்புகளிலிருந்து விலக்க வைக்கத் தவறினார்கள் தொழிலாளர்கள். அரசியல் ரீதியில் பயிற்றுவிக்கப்படாமல், போர்க் குணத்தை மட்டுமே தங்களது மூலதனமாகக் கொண்டிருந்த தொழி


படிப்பகம்

www.padippakam.com

லாளர்கள், துரோகியின் சுயவிமர்சனத்திற்கு நெகிழ்ந்து ரஞ்சன் நாயரையே தங்கள் தரப்புத் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள்.

தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து அவர்களின் போர்க்குணத்தை நாடி பிடித்து பார்த்தது நிர்வாகம். துரோகத் தலைவர்களுக்கு எதிராக தொழிலாளர்கள் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக கம்பெனியை ஒருவாரம் இழுத்து மூடியது.

அடுத்த சில வாரங்களில் ரஞ்சன் நாயர் மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தி '83 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அவரை பணிநீக்கம் செய்தது 'டெல்கோ' தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்ட தங்கள் தலைவருக்கு ஆதரவாக உள்ளிருந்தே பெரும்பலத்தை கூட்ட உணர்வு பூர்வமாகச் செயல்பட்டனர். இருந்த ஒரே நிர்வாகத்தின் பினாமி சங்கமான டெல்கோ கம்கார் சங்கத்தனாவின் தலைமையை படிப்படியாக தங்கள் பிடிக்குள் கொண்டு வந்தனர்.

'82 ஆம் ஆண்டிலிருந்து '87 ஆம் ஆண்டு வரை இவ்வேலையில் மூழ்கியிருந்தனர். '85ஆம் ஆண்டில் வந்த சம்பள உயர்வு ஒப்பந்தத்தில் கூட இவர்கள் கவனம் செலுத்தவில்லை. கொடுத்ததை வாங்கிக் கொண்டனர். அக்காலத்தில் நிர்வாகமே முன்வந்து சங்க நிர்வாக பிரதிநிதிகள் பணி நேரங்களில் சங்க வேலைகளில் ஈடுபட அனுமதித்தது. இதை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டனர். கருங்காலி சங்க பிரதிநிதிகள் பணி நேரங்களில் தொழிற்சாலைக்கு வராமல் உல்லாசமாக பொழுதைக் கழித்தனர். ரஞ்சன்நாயர் சார்புப் பிரதிநிதிகள் அந்த சலுகையைப் பயன்படுத்தாமல் பணியிடத்தில் தொழிலாளர்களுடன் கலந்து தங்கள் தரப்பை வலுப்படுத்திக் கொண்டனர்.

'87 டிசம்பரில் நடந்த சங்க நிர்வாகத் தேர்தலில் 42ல் 34 இடங்களைக் கைப்பற்றினார்கள். அமைப்பு ரீதியில் பலமடைந்திருந்தாலும், அரசியல் ரீதியில் தொழிலாளர் வர்க்கக் கண்ணோட்டம் இல்லாமல் இருந்தனர். '83ல் வேலையிழந்த ரஞ்சன்நாயர், பூனா நகரம் லட்சுமி ரோடு கீதா லாட்ஜில் தங்கிக் கொண்டு ஓட்டுக்கட்சி தலைவர்கள் பாணியில் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். இன்னும் பிற்போக்கான முறையில் மதநம்பிக்கையை அடிப்படையாக வைத்து தொழிலாளர்களிடம் ஆதரவு திரட்டினார்.

மகாராஷ்டிராவில் பிரபலமாக இயங்கும் சிவசேனா இந்துமதவெறி அமைப்பு முறைகளை அச்சாக கடைபிடித்தார். டெல்கோ தொழிலாளர் குடியிருப்பு பகுதிகளில் பரவலாக சங்க கிளை அலுவலகங்களை திறந்து பிள்ளையார், சாமி படங்களை மாட்டி ஆராதனைகள் நடத்துவதற்கு வகை செய்தார். சொற்பொழிவுகளின் போது, தொழிலாளர்களின் கஷ்டங்கள் நீங்குவதற்காக பிரார்த்தனைகள் நடத்துவதை கண்டிப்பாக்கினார். எந்த மட்டத்தில் கூட்டங்கள் நடந்தாலும் அதன் இறுதியில் பிள்ளையார் மேல் தொழிலாளர்கள் உறுதி மொழி எடுப்பதை நடைமுறையாக்கினார்.

அரசியல் சார்பற்ற தொழிற்சங்கம் என்ற மாயையை உருவாக்கி முற்றும் முழுக்க பிற்போக்கு சித்தாந்தத்திற்கு தொழிலாளர்களை பலிகடாவாக்கினார். தனது 7 ஆண்டுகால 'போராட்ட' வரலாற்றில் தொழிற்சாலைக்கு வெளியே தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கையை நெறிக்கும் எந்த ஒரு அம்சத்தையும் தொழிற்சங்க நடவடிக்கையினுள் இணைத்ததில்லை. நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் கூரிய சக்தி படைத்த தொழிலாளி வர்க்கத்தை தனது கூலி உயர்வுக்காக மட்டுமே போராடும் சுயநல கும்பலாக பதப்படுத்தி பயன்படுத்தினார்.

தொழிலாளர்களின் ஒன்றுபட்ட பலமும் போர்க் குணமிக்க போராட்டமும் நிர்வாகத்தை கதிகலங்கடித்தது உண்மைதான்! ஆனால் அதற்கான அறுவடையை தொழிலாளர்கள் முழுமையாக அனுபவித்ததே இல்லை. தனிப்பெரும் கதாநாயகனாக தன்னை உயர்த்திக் கொள்ளவும், அதன் மூலம் நிர்வாகத்திடமும் அரசாங்கத்திடமும் தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கை - பேரம் பேசும் தகுதியை - உயர்த்திக் கொண்டார் ரஞ்சன்நாயர்.

இவ்வளவு பெரிய தொழிற்சங்கமாக வளர்ந்த பிறகும், தொழிலாளர்களை அவமானப்படுத்தும் நிர்வாகமே சந்தா பணத்தை பிடித்தம் செய்யும் முறையை எதிர்க்கவில்லை ரஞ்சன்நாயர். கடைசிவரையில் நிர்வாகத்திடம் கையேந்தி தான் தமக்கு சேர வேண்டிய சந்தாப் பணத்தை பெற்று வந்தார். நிர்வாகமே, அவ்வேலையை இனிநான் செய்யமாட்டேன் என்று '89 ஜனவரியில் முகத்தில் அடித்த மாதிரி கூறிய பிறகுதான் ரஞ்சன்நாயர் தொழிற்சங்கத்துக்கு நேரடியாக சந்தா வசூலிக்கும் தைரியம் வந்தது!

இதன் நடுவில் நிர்வாகம் 'டெல்கோ' தொழிலாளர் சங்கம் (TEU) என்ற இன்னொரு பினாமி தொழிற்சங்கத்தை அதே '89 ஜனவரியில் உருவாக்கியது. சில நூறு உறுப்பினர்களை மட்டுமே கொண்ட அச்சங்கத்தை அதிகாரப் பூர்வமான தொழிற்சங்கமாக அங்கீகரித்தது. தான் முன்னர் உருவாக்கிய ரஞ்சன்நாயர் செல்வாக்கு வகிக்கும் 'டெல்கோ கம்கார் சங்கத்னா'வுடன் எந்த ஒரு பேச்சுவார்த்தை நடத்தவும் மறுத்தது.

நிர்வாக விதிகளுக்கு முரணாக வெளி ஆட்களை சங்கத் தலைமைக்கு கொண்டு வர அத்தொழிற்சங்கி மகாசபை தீர்மானம் நிறைவேற்றியதையும், வேலைநீக்கம் செய்யப்பட்ட ரஞ்சன்நாயரை, செயல் தலைவராக நியமித்ததையும், சட்டவிரோதம் என்று கோர்ட்டுக்கு இழுத்தது.

புதிய பினாமி தொழிற்சங்கத்துடன் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தி அதை கவுரவித்தது. '87 - '88 சம்பள உயர்வு ஒப்பந்தத்தை அதனுடன் போட்டுக் கொண்டது. உயர்த்திய 585 ரூபாய் புதிய சம்பள உயர்வை அச்சங்கத்தை சார்ந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கியது. நிர்வாகத்தின் வரைமுறையற்ற இந்த அடாவடித்தனத்தால் தொழிலாளர்கள் கொதித்தெழுந்தனர். பின்வரும் கோஷங்களை உள்ளடக்கி தொடர்ச்சியான போராட்டங்களைத் துவக்கினர்.

★ சம்பள உயர்வு ஒப்பந்தத்தை 'கம்கார் சங்கத்தனா'வுடன் நடத்து!

★ தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட 135 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்து!

★ 700 தொழிலாளர்கள் மீது தொடுத்திருக்கும் குற்றப் பத்திரிக்கையைத் திரும்பப் பெறு!

★ போலீசு தொடுத்திருக்கும் அனைத்து பொய் வழக்குகளையும் திரும்பப் பெற நடவடிக்கை எடு! தொழிலாளர்களிடம் முறைகேடாக பிடித்தம் செய்த 40 லட்சம் ரூபாய்க்கும் மேலான பணத்தை திரும்ப கொடு!

— என்ற கோரிக்கைகளின் கீழ் 7000க்கும் அதிகமான தொழிலாளர்கள்

போராட்டக் களத்தில் நிற்கும் டெல்கோ தொழிலாளர்கள். போராட்டத்தின் அறுவடை யாருக்கு?





படிப்பகம்

ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் நடத்தினர்.

10 நாட்களுக்கும் மேல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்த 3000 தொழிலாளர்களை, கடந்த செப்டம்பர் 19ந் தேதி பம்பாய் நகர போலீசும், மாநில ரிசர்வ் போலீசும் சுற்றி வளைத்து தாக்கியது. துப்பாக்கி கட்டைகளால் அடித்து 80க்கும் மேற்பட்ட போலீசு வேன்களில் ஏற்றி பல சிறைகளில் பிரித்து அடைத்தது.

படுகாயமடைந்து வீதிகளில் இரைந்து கிடந்த பல நூறு தொழிலாளர்களை பொது மக்கள் திரண்டு சாலையோரங்களுக்கு அப்புறப்படுத்தினர். பல மருத்துவர்கள் தாமே முன்வந்து இலவசமாக மருத்துவம் செய்தனர். 'பஜாஜ் ஆட்டோ', 'சேன்ட்விக் ஏசியா', 'கூபர் என்ஜினியரிங்' ஆலைத் தொழிலாளர்கள் 'டெல்கோ' தொழிலாளர்களுக்கு தங்கள் ஒருமித்த ஆதரவைத் தெரிவித்தனர். கண்டனம் தெரிவித்து 2 லட்சம் தொழிலாளர்கள் செப்டம்பர் 24ல் வேலை நிறுத்தம் செய்தனர். ஒரு லட்சம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். 'டெல்கோ' தொழிலாளர் போராட்டத்தை நகர மக்களில் 69 சதவிகிதம் பேர் ஆதரித்ததாக ஒரு கருத்து கணிப்பு நிறுவனம் தெரிவித்தது.

பல லட்சம் தொழிலாளர்களின் வேண்டுகோளையும் மதிக்காமல் மகாராஷ்ட்டிர சரத்பவார் காங்கிரசு அரசு போராட்டத்தை குரூரமாக நசுக்கியது பிறகு தொழிற்சங்கத் தலைமையை பேச்சுவார்த்தைக்கு அழைத்து நாடகமாடியது.

www.padippakam.com
அரசு அழைப்பின் பேரில் அமெரிக்காவிலிருந்து வந்திறங்கிய ரத்தன் டாட்டா போராட்டக்காரர்களின் எந்த ஒரு கோரிக்கையையும் ஏற்க மறுத்தார். செப்டம்பர் மாத இறுதியில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்த பிறகு சங்கத் தலைமையின் அறைகூவலை எற்று நவம்பர் இறுதிவரை தொழிலாளர்கள வேலை நிறுத்தந்தில் ஈடுபட்டனர்.

முதலாளித்துவ பத்திரிக்கையெல்லாம் இப்படி எழுதின: ''வெளிப்படையாக சொன்னால் ரஞ்சன் நாயர் போராட்டத்தில் நிர்வாகத்திற்கு எதிரான எந்தவொரு கொள்கை மோதலும் இல்லை. பொருளாதார நலனுக்கான கோரிக்கையிலிருந்து தடம் புரளாத அதன் போராட்டத்திற்காக உண்மையிலேயே மகிழ்ச்சியடைய வேண்டும்'' ''தொழிற்சாலையின் உற்பத்திக்கு (நிர்வாகம் லாப வெறியோடு திணிக்கும் வேலைச் சுமை, நவீனமயம்) அவர் எதிரானவரல்ல. தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்கும் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப சம்பளத்தையும் கோருகிறார். இது செய்யக்கூடியதுதான்''. ''தொழிலதிபர்கள் அவருடன் சுமூக உறவை ஏற்படுத்திக் கொள்வது பிற இடங்களுக்கும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்.''

''ஏற்கனவே தத்தா சமந்த் தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்ட பல தொழிற்சாலைகள் நிம்மதியாக இயங்குகின்றன. உற்பத்தியின் இலக்கும் உற்பத்தியின் பாதிப்பற்ற சூழ்நிலைக்கும் அச்சங்கமே உறுதி கொடுத்து நிறைவேற்றுகிறது. மரபு ரீதியான உற்பத்தி முறையை ஒப்பீட்டளவில் அதிகம் சார்ந்திருக்கும் துணி ஆலை தொழிற்சாலைகளே இதனால் அதிக லாபத்தை ஈட்டுகிறது. முழுவதும் நவீனமயமாக்கப்பட்ட பொறியியல் தொழிற்சாலைகளில் இது பன்மடங்கு லாபத்திற்கு வழிவகுக்கும்'' என்று கணக்குகள் போட்டுக் காட்டின. ''ரஞ்சன் நாயர் போன்றவர்களை சரியான முறையில் அடையாளங் கண்டு கொள்ளுங்கள். அவரை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள்'' என்று உபதேசித்தன.

தங்களின் அறிவுபூர்வமான பிரதிநிதிகளான முதலாளித்துவ பத்திரிக்கைகளின் கருத்துகளுக்கு முதலாளிகள் செவி சாய்த்தார்களா இல்லையா என்பது தெரியாது.

ஆனால், நவம்பர் மாதம் நடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்பு திடீரென ரஞ்சன் நாயர் போராட்டத்தை முழுவதுமாக வாபஸ் பெற்றார்.

டெல்கோ நிர்வாகம் ''இது நிபந்தனையற்ற சரணடைவு'' என்று மகிழ்ச்சி தெரிவித்தது. ''நிர்வாகம், தொழிலாளர்களின் கோரிக்கையை பரிவுடன் கவனிக்கும் என்று முதன்மந்திரி சரத்பவார் உறுதி கூறியிருப்பதாக'' ரஞ்சன் நாயர் நம்பச் சொன்னார். டெல்கோ நிர்வாக இயக்குநர், இ.ஏ. தலாவ்லிகார் 'நிர்வாகத்தின் சார்பாக, சரத்பவார் மூலமாக எந்த பேரமும் நடக்கவில்லை' என்று மறுத்தார்.

12,000 தொழிலாளர்களின் பல ஆண்டு கால தொடர்ச்சியான கடுமையான, சளையாத போராட்டம் பலனேதுமில்லாமல் கீழறுத்துப் போடப்பட்டு விட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் 'பிந்தரன்வாலே' என்று வர்ணிக்கப்பட்ட ரஞ்சன் நாயர் தொழிலாளர் முதுகில் குத்திவிட்டார்.

புனே, பிம்புரி, சின்ச்வாட் வடடாரம், நாசிக், அகமத்நகர், அவரங்காபாத் மக்களிடம் 'டெல்கோ' தொழிலாளர்களின் போராட்ட வீச்சு காங்கிரசு அரசுக்கெதிரான வெறுப்பை கணிசமான அளவு உயர்த்தியது. பூனா தொகுதி காங்கிரசு வேட்பாளர் வி.என்.காட்கில் தோற்றுப் போவதற்கான அறிகுறிகள் பட்டவர்த்தமானத் தெரிந்தன. இதைத் தவிர்க்கும் பொருட்டு, சரத்பவார் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மந்திரி சபையை மொத்தமாக அனுப்பி, ரஞ்சன் நாயரை தனது அதிகார செல்வாக்கில் வளைத்துவிட்டார்.

இதனால், குறைந்தது டெல்கோ தொழிலாளர்கள் குடும்ப சார்பான ஓட்டுக்கள் 40,000 கிடைக்க, வி.என்.காட்கில் 8000 வோட்டுகள் வித்தியாசத்தில் வென்று தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார். ரஞ்சன் நாயரும் அதனால் பலன் அடையப் போகிறார். ஆனால் 12,000 டெல்கோ தொழிலாளர்களின் குடும்பங்களின் கதி? பல ஆண்டுகாலம் தங்களது விடிவுக்கு நம்பியிருந்த தலைவனின் துரோகத்தால் போராட்ட சக்தி அனைத்தையும் வீணாக்கி வீழ்ந்து கிடக்கிறார்கள்! இனிமேல் எப்போது அவர்களுக்கு விடிவு? இனி எந்த திசையில் அவர்கள் பயணம்?

□ மணி.

## சுய வேலை வாய்ப்புத் திட்டமா? சுய தம்பட்டமா?

தமிழக அரசின் தொழில் மையத்திலிருந்து தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்களாகத் தேர்வு செய்து அவர்களுக்குப் பண உதவியும், நேரில் ஆலோசனை வழங்குவதுதான் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் செயல்பாடு. ஆனால், உண்மையில் இத்திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது ?

கடந்த 17.10.89 அன்று வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத் தொழில் மையத்திலிருந்து சுமார் 150 பேருக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு அனுப்பப்பட்டது. அதில் சான்றிதழ்கள், தொழில் பற்றிய திட்ட அறிக்கை, அத்தொழிலுக்கு உள்ள சந்தை நிலவரம் பற்றிய அறிக்கை முதலானவற்றை கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நேர்முகப் பேட்டி அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றது. பள்ளி இறுதி வகுப்பு படித்தவர்கள் முதல் முதுகலை பட்டம் பெற்றவர்கள் வரை பலரும் சுய வேலை தொடங்கும் ஆர்வத்துடன் வந்திருந்தனர்.

பேட்டி தொடங்குவதற்கு முன் நான்கு தாள்கள் அடங்கிய ஒரு மனுவைக் கொடுத்து நிரப்பச் சொன்னார்கள். மனுவில் தமது புகைப்படங்களை ஒட்டச் சொன்னார்கள். பிறகு ஒவ்வொருவராகப் பேட்டிக்கு அழைத்தனர்.

பேட்டியில், ''என்ன தொழில் செய்யப் போகிறாய்? எப்படி லாபம் ஈட்டிக் கடனை அடைக்கப் போகிறாய்?'' என்ற கேள்விகளுக்கு மாறாக அதிகாரிகள் கிண்டலும் கேலியும் செய்தனர். ''10,000 ரூபாய் போதுமா? உங்களாலே தொழில் நடத்த முடியாதே! கூலி கொடுத்தே கட்டுப்படியாகாதே! எதுக்கு இந்த வீண் பேராசை? நீ டாட்டா, பிர்லா கம்பெனியோடு போட்டி போடுவியா? அரசாங்கம் இன்னும் நிறைய கொடுத்தா வாங்கிட்டு ஏப்பம் விட்டுருவீங்க! எதுக்குயா 35,000 ரூபாய் கேட்குறே? ஒரு 4,000 ரூபா வாங்கிக்கோ!'' - என்று அலட்சியமாக கூறிவிட்டு, சரி போயிட்டு வா என்று அனுப்பி விட்டனர்.

வந்திருந்த அனைவருக்கும் இதே பாணியில் தான் பேட்டி நடந்தது. எல்லோரும் ''வேலை தான் கொடுக்க வக்கில்லே; நாமே ஏதாவது தொழில் தொடங்கலாம்னு இங்க வந்தால் நம்மை கேலி செய்கிறார்களே!'' என்று விரக்தியின் விளிம்புக்கே தள்ளப்பட்டு வேதனையுடன் சென்றனர்.

ஆக சுய வேலை வாய்ப்புத்திட்டம் என்பது அரசின் சுய விளம்பரம், சுய தம்பட்டம்! அதிகாரிகளுக்கு பொழுதுபோக்கு விளையாட்டு! வேலையில்லாதவர்களுக்கு கண் துடைப்பு!

கண்துடைப்பு நாடகத்துக்கு எதிராக கரம் இணைப்பதே இளைஞர்கள் முன்னுள்ள இன்றைய கடமை!

□ ரமேஷ், வாலாஜா.



படிப்பகம்

www.padippakam.com

ரஷியாவில் கோர்பசேவ் இரும்புக்கதவை அகலத் திறந்து முதலாளித்துவத்தை அரியணை ஏற்றியதைத் தொடர்ந்து அண்மைக் காலமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதன் தாக்கமும் வீச்சும் கலகங்களாகக் கிளம்புகின்றன. ஏற்கெனவே போலந்தும் ஹங்கேரியும் போலி சோசலிச முகமூடியைக் கழட்டிவிட்டு முதலாளித்துவத்தை நிறுவுவதில் முண்டியடிக்கின்றன. அந்நாடுகளில் ஜனநாயகத்தை வளர்த்தெடுக்க ஏகாதிபத்தியங்கள் போட்டி போட்டுக் கொண்டு பொருளாதார உதவிகளைச் செய்து வருகின்றன. செக்கோஸ்லாவியா, ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கோரும் ஆர்ப்பாட்டங்களும் அதற்கெதிராக சீனப்பாணியில் அடக்குமுறைகளும் பெருகி வருகின்றன. கி.ஜெர்மனியின் மக்கள் ஜனநாயக மாயமானைத் தேடி மே.ஜெர்மனிக்கு அகதிகளாகத் தப்பியோடியதைத் தொடர்ந்து கி.ஜெர்மனியின் புதிய ஆட்சியாளர்கள் பெர்லின் மதிற்சுவரை உடைத்து முதலாளித்துவத்தை வரவேற்கத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில் கம்யூனிசம் காலாவதியாகிவிட்டது என்ற முதலாளித்துவ முதறிஞர்களின் உபதேசங்களும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மேன்மையைப் பற்றிய உபன்னியாசங்களும் பெருகி வருகின்றன. இது ஒருபுறம் இருக்கட்டும். முதலாளித்துவ ஜனநாயகத்தின் தொட்டிலாக அவர்களால் வர்ணிக்கப்படும் குபேரபுரியான அமெரிக்கா எப்படி இருக்கிறது?

# மரண வாயிலில் அமெரிக்கா!

வளங் கொழிக்கும் அமெரிக்காவின் 16 வயது இளைஞன், மைக்கேல் டயஸ். தனது ஊரிலிருந்து 150 மைல்களுக்கு அப்பாலுள்ள பிரின்ஸ்டன் நகருக்கு தனது மோட்டார் சைக்கிளில் போனான். அங்கு முன்பின் தெரியாத ஒரு பெண்மணியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தனது வாகனத்தில் வேகமாகத் தப்பியோடிவிட்டான். அவன் தனது பள்ளி சகாக்களிடம் 'குட்டி ராம்போ' என்று பெயரெடுத்தவன். பின்னர் கைதான அவன் போலீஸ் விசாரணையில் கூறினான்: ''நான் ராம்போவைப் போல ஏதாவது சூரத்தனம் செய்ய விரும்பினேன். யாரையாவது கொன்று விட்டு தப்பியோட என் மனம் துடித்தது. எனவேதான் அப்படிச் செய்தேன்!''

இந்த அதிர்ச்சியூட்டும் செய்தியிலிருந்து அமெரிக்க மக்கள் மீள்வதற்குள் அடுத்தடுத்து பல பீதியூட்டும் சம்பவங்கள் நடந்தன.

மன்ஹாட்டன் நகரின் மத்திய பூங்காவில் ஒரு இளம் பெண்ணை கும்பலாக இளைஞர்கள் சூழ்ந்து கொண்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். அவர்கள் அனைவரும் 14 வயதுக்குட்பட்டவர்கள்.

கடந்த செப்டம்பரில் ஹுஸ்டன் நகரில் 66 வயதான மூதாட்டியை பாலியல் பயங்கரவாதத்தை ஏவிக் கொலை செய்துவிட்டு, அவரது வீட்டையும் கொள்ளையடித்து விட்டு தப்பியோடினான் ஒரு இளைஞன். அவனுக்கு வயது 16.

**சீரழிவின் விளிம்பில்...**

''ராம்போ'' திரைப் படத்தின் மூலம் தேசியவெறியூட்டி தனது ஆதிக்க வெறியை நியாயப்படுத்த எத்தணித்தது, அமெரிக்க ஏகாதிபத்தியம். ஆனால் அது அமெரிக்க இளைஞர்களைச் சீரழித்து மனநோயாளிகளாக்கி விட்டது. சிறுவர்கள் மட்டுமல்ல, இப்போது சிறுமிகளும் கூட சீரழிந்துவிட்டனர். எஸ்கோண்டிடோ நகரில் 16 வயது இளை ஒருத்தியின் தலைமையில் ஒரு இளைஞர் கும்பல் இரு வீடுகளைச் சூறையாடி 3 பள்ளிக் கூடங்களைத் தீயிட்டுக் கொளுத்தியது. கேப்கோட் நகரில் 15 வயது இளம்பெண் குடிபோதையில் தனது உறவினரேயே கத்தியால் குத்திக் கொன்று விட்டாள்.

உதிரத்தை உறைய வைக்கும் இத்தகைய சம்பவங்கள் விதிவிலக்காக அல்ல. அதுவே அமெரிக்காவின் விதியாகிவிட்டது. போதை மருந்து, ஆபாச சினிமா, வீடியோக்கள், வக்கிரமான பாடல் காசெட்டுகள், பாலுணர்வு - வன்முறை வெறியூட்டும் காமிக்ஸ் கதைகள் - இவையெல்லாம் சேர்ந்து இளந்தலைமுறையினரை ஆக்கிரமித்துக் கொண்டு அவர்களை கிரிமினல்களாக மாற்றிவிட்டன. ''குடும்ப உறவுகள் சிதைந்து பாசமும் அன்பும் அன்னியமாகிப் போனதால் குழந்தைகள் விரக்தியடைந்து இத்தகைய வெறிச் செயல்களுக்குப் பலியாகின்றனர்'' என்கிறார் ஒரு அமெரிக்க உளவியல் அறிஞர்.

அமெரிக்க தெருக்களில் அலைந்து - திரியும் அனாதைகள்.



அமெரிக்காவில் எல்லோரும் துப்பாக்கி வைத்துக் கொள்ள 'சுதந்திரம்' உண்டு. ஆனால் அது கொலைவெறியாட்டத்திற்கான சுதந்திரமாகத்தான் உள்ளது. அமெரிக்காவில் சராசரியாக 24 மணி நேரத்தில் 56 கொலைகள் நடக்கின்றன. இதுதவிர விரக்தியடைந்து பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பள்ளிக்கூடங்களில் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் சோதனை செய்த பிறகே மாணவர்களை உள்ளே அனுப்புகின்றனர். ஏனெனில், துப்பாக்கியுடன் திரியும் சிறுவர்கள் தமது ஆசிரியர்களையும் சக மாணவர்களையும் சுட்டுக் கொன்று விடுகின்றனர்.

**வெள்ளை இனவெறியர்களின் காட்டுமிராண்டித்தனம்!**

கொலைகள் - தற்கொலைகள் மட்டுமல்ல, இனவெறியாட்டங்களும் அண்மைக் காலமாக அமெரிக்காவைப் பிடித்தாட்டுகிறது. தென்னாப்பிரிக்க நிறவெறிக் காட்டுமிராண்டிகள் கருப்பின மக்களை அடக்கி ஒடுக்குவதைப் போலவே, அமெரிக்க வெள்ளை இனவெறியர்கள் அமெரிக்க கருப்பின மக்கள் மீது வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். சாதாரண கருப்பின மக்கள் மட்டுமல்ல, உயர் கல்வி கற்று பேராசிரியர்களாகவும், அரசு உயர் அதிகாரிகளாகவும் பணியாற்றும் பல கருப்பர்களும், கலப்பினத்தவரும் வெள்ளையர்கள் குடியிருக்கும் பகுதிகளில் சுதந்திரமாக வசிக்க முடிவதில்லை.

எட்வினா பேரன் என்ற கறுப்பின பெண் ஆராய்ச்சியாளர் வெள்ளையர் வாழும் பகுதியில் குடியேறிய பிறகு அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் அச்சுறுத்தப்பட்டார். நள்ளிரவில் நாகரீக வெள்ளையர்கள் குடித்துவிட்டு வந்து அவர் வீட்டைச் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்யத் தொடங்கினர். சிலர் கத்தியையும் துப்பாக்கியையும் காட்டி மிரட்டினர். பீதியடைந்த அவர் கறுப்பர்கள் வாழும் பறநகர்ப் பகுதிக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

இனப் பாகுபாடின்றி சமத்துவம் நிலவுவதாக பீற்றிக் கொள்ளப்படும் அமெரிக்காவில் கறுப்பர்கள் இரண்டாம் தர குடிமக்களாக சேரிகளில் உழல்கிறார்கள். கல்வி, வீடு, சுகாதாரம், மருத்துவம், நல்லொழுக்கம் எதுவுமற்ற பன்றிகளாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். ஆனால் கருப்பின 'காட்டுமிராண்டிகளால்' அமெரிக்காவின் சமூக ஒழுக்கம் கெட்டுவிட்டது என்று நாகரீக வெள்ளையர்கள் திமிராக தொக்கரித்துக் கொண்டு பல இடங்களில் கறுப்பர்கள் மீது பகிரங்கத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கருப்பர்கள் ஒருபுறமிருக்கட்டும். பின்



படிப்பகம்

www.padippakam.com

தங்கிய ஆசிய நாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள் கூட வெள்ளை இன வெறியர்களால் தாக்கப்படுகின்றனர். குறிப்பாக இந்தியப் பெண்கள் தமது கலாச்சாரப் படி புடவை கட்டி நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டால் கூட, அதைச் சகிக்க முடியாமல் இனவெறியர்கள் அவர்களைத் தாக்கவும் மானபங்கப்படுத்தவும் செய்கின்றனர்

''நமது நாடு இருபெரும் சமூகங்களாகப் பிரிந்து விட்டது. ஒருபுறம் வெள்ளையர்கள்; மறுபுறம் கருப்பர்கள். இணக்கம் காண முடியாத படியும், சமத்துவமற்றும் இரு இனங்கள் பிரிந்து வாழும் நிலை பெருகி விட்டது'' என்று அமெரிக்க தேசிய ஆலோசனைக் குழுவின் அறிக்கையே ஒப்புக் கொள்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல அமெரிக்காவின் பூர்வ குடிகளான - மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களை, ஐரோப்பாவிலிருந்து வந்தேறியவர்களான வெள்ளையர்கள் படிப்படியாக அழித்து வருகின்றனர். இந்த பூர்வகுடிகளின் சமூகம் பல்கிப் பெருகிவிடக்கூடாதென்று நாகரீக அமெரிக்கர்கள், செவ்விந்தியப் பெண்களுக்கு கட்டாய கருத்தடையும், கருக் கலைப்பும் செயது அவ்வினத்தையே அழித்து வருகின்றனர்.

**குபேரபுரியல்ல; குப்பைமேடு!**

ஏகாதிபத்திய எடுபிடிகள் கதைப்பது போல அமெரிக்காவில் வளம் கொழிக்கவில்லை; வறுமை தாண்டவமாடுகிறது. அரசாங்க புள்ளி விபரப்படியே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 4 கோடி. அமெரிக்காவில் வேலையற்று, வீடற்று தெருக்களில் உழல்பவர்களுக்கு அரசாங்கமே கஞ்சித் தொட்டி திறந்து வைத்துள்ளது. ஒரு துண்டு ரொட்டியும் சூப்பும் பெறுவதற்கு மக்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு வரிசையில் வருவார்கள். மேலைநாடுகளில் இதனை 'பிரட் லைன்' 'சூப் லைன்' என்று குறிப்பிடுவார்கள். நியூயார்க் நகரில் மட்டும் இப்படி 12 லட்சம் பேர் கையேந்தி நிற்கின்றனர்.

குபேர நாடான அமெரிக்காவில் வீடிழந்து தெருவில் வாழும் மக்களின் எண்ணிக்கை 22 லட்சத்தைத் தாண்டி விட்டது. நியூயார்க்க நகரில் மட்டும் இத்தகையோரின் எண்ணிக்கை 75,000 க்கும் மேல் உயர்ந்து விட்டது என அரசே ஒப்புக் கொள்கிறது. வீடிழந்து பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் ரயில் நிலையங்கள், பொதுப் பூங்காக்கள், பாலங்களின் அடியில், டெலிபோன் 'பூத்து'களில் எப்படியோ உயிர் வாழ்கின்றனர். கடுங்குளிர் நிறைந்த நாட்டில் எத்தனைக் காலம் தான் இப்படித் தாக்குப்பிடிக்க முடியும்? கடுங்குளிர் தாங்காமல் உடல் விறைத்து இறந்து போனவர்கள் ஏராளம்.

அமெரிக்காவில் பெரும் பணக்காரர்களது மாளிகைகளின் அறைகளுக்குச் சூடேற்றும் கருவிகள் அம்மாளிகையின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். இக்கருவியின் அருகில் இரவில் ஒண்டிக் கொண்டால், ஒரளவாவது குளிரின் கொடுமையிலிருந்து தப்பிக்கலாம் என்று வீடற்ற பலர் குடும்பத்துடன் இக்கருவியின் அருகே படுத்துறங்குகின்றனர். அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையை அடுத்துள்ள பங்களாக்களின் வாசலில் இப்படிப் பலர் இரவுப் பொழுதைக் கழித்து வருவதாக அமெரிக்கப் பத்திரிக்கைகளே படத்துடன் செய்தி வெளியிட்டன.

உளவு பார்க்கவும், தனது ராணுவ மேலாண்மையை நிலைநாட்டவும் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவும் அமெரிக்க ஏகாதிபத்தியம், தமது மக்களுக்கு குடியிருப்பு வசதிகூட செய்து தராமல் மௌனமாக அவர்களை 'வானுலகிற்கு' அனுப்பி வருகிறது. வீடற்றோருக்கென ரீகன் காலத்தில் போட்ட திட்டங்கள் அனைத்தும் பரண் மீது உறங்குகின்றன. அதே சமயம் ரீகன் கும்பல் 6,400 கோடி டாலர் நகர்ப்பற வீட்டு மனை ஊழலில் சிக்கி இப்போது சந்தி சிரிக்கிறது. புஷ் ஆட்சியில் வீடற்றோர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியாக எந்தத் திட்டமும் இல்லை. இதனால் வீடற்றோர் நிலைமை மிக மோசமானதோடு, புதிதாக பத்தாயிரக்கணக்கில் வீடற்றோர் பெருகி பிரச்சினை தீவிரமாகிவிட்டது. கடந்த அக்டோபரில் பல பத்தாயிரக்கணக்கான வீடற்றோர் தலைநகரில் திரண்டு ஆர்ப்பாட்டமும் செய்துள்ளனர்.

**பட்டினிச் சிறையில் பாட்டாளிகள்**

கொள்ளை லாபம் ஒன்றையே குறிக்கோளாக கொண்ட முதலாளித்துவ சக்கரம் தறிகெட்டுச் சுழல்வதன் விளைவாக ஆலை மூடலும் ஆட்குறைப்பும் அமெரிக்காவின் தீராத வியாதியாகிவிட்டது. அமெரிக்காவின் மிகப்பெரிய ஜெனரல் எலட்ரிக் கம்பெனி அண்மையில் கதவடைப்பு செய்து 5,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்தது. ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் கடந்த செப்டம்பர் முதலாக லே-ஆப் அறிவித்து தொழிலாளிகளைப் பட்டினி போட்டுள்ளது. போர்டு மோட்டார் கம்பெனி கடந்த 5 ஆண்டுகளாக ஓவர்டைம் கொடுத்து வேலை வாங்கியது போய், இன்று லே-ஆப் அறிவித்தும் ஆட்குறைப்பு செய்தும் தொழிலாளிகளை பட்டினிக் கொஞ்சிறைக்குள் தள்ளி வருகிறது.

அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் வேலை தர வேண்டியது அரசின் கடமை; வேலை தர முடியாவிட்டால் அரசு உதவிப் பணம் தரவேண்டும் என்பது அரசின் சட்டம். ஆனால் வேலையில்லாதவர்களில் 40% பேருக்கு மட்டுமே அரசு உதவித் தொகை வழங்குகிறது. இதுகூட அனாவசிய செலவு என்று புஷ் அரசு இந்த ஆண்டு மேலும் நிவாரணத் தொகையைக் குறைத்து ஏராளமானோரைப் பிச்சைக்காரர்களாக்கி உள்ளது. வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்கள் தமது வேலைத்திறனைப் பட்டியலிட்டு அமெரிக்கத் தெருக்களில் அமர்ந்து கொண்டு யாராவது தம்மை தினக் கூலிக்கு அழைக்க மாட்டார்களா என்று ஏங்குகின்றனர்.

**நெருக்கடியின் கிடுக்கிப் பிடியில்...**

இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை விட மோசமான நெருக்கடிகுள் இன்றைய ஏகாதிபத்திய உலகம் சிக்கித் தவிக்கிறது. அதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது அமெரிக்கப் பொருளாதாரம். ஆண்டுதோறும் ஆயுதச் செலவை அதிகரித்து வரும் அமெரிக்கப் பொருளாதாரம் நிலை குலைந்து போய்விட்டது. உள்நாட்டுக் கடனோ 3 லட்சம் கோடி டாலரைத் தாண்டி விட்டது. வெளிநாட்டுக் கடனோ ஆண்டு தோறும் பூதாகரமாகப் பெருகிக் கொண்டே போகிறது. ஆண்டுதோறும் பற்றாக்குறை பட்ஜெட்டும், அதை ஈடுகட்ட புதிய வரிவிதிப்பும் என்று மீண்டும் நெருக்கடியில் சிக்கித் திணறுகிறது.

ராம்போ ரீகனுக்குப் பிறகு வந்த புதியவர் புஷ் ஆட்சியின் பற்றாக்குறை 10 600 கோடி டாலர்களாகும். ஆனால் இதுகூட முழுமையானதல்ல; இந்திய ஆட்சியாளர்களைப் போலவே புள்ளிவிபர சதவிகித கணக்குப் புளுகு மூட்டைகளை அவிழ்த்து



பெருகிவரும் போதை மருந்து வன்முறைக்குப் பலியானவர்.



படிப்பகம்

www.padippakam.com

விட்டு பற்றாக்குறையின் உண்மையான அளவை மறைக்கின்றனர். உண்மையில் பற்றாக்குறை 20,600 கோடி டாலராகும் என்று மதிப்பிடுகிறது. ''டைம்'' ஏடு. பற்றாக்குறை பூதாகரமானதாக உள்ளதால் பொருளாதாரம் பாதாளத்துக்குப் போய்விட்டது.

### சேவைத் துறைகள் புறக்கணிப்பு

''பற்றாக்குறை நிலவினாலும் அதை சமாளித்து விடமுடியும்; எந்த திட்டச் செலவையும் குறைக்க மாட்டோம்'' என்று நம்பச் சொன்னார் புஷ். ஆனால் பற்றாக்குறையை ஈடுகட்டவோ, சேமிப்பைக் குவிக்கவோ வழியில்லாத நிலையில், மக்களது அத்தியாவசிய சேவைத் துறைக்கான செலவுகளைக் குறைக்கத் தொடங்கிவிட்டது புஷ் அரசு. கல்வி, மருத்துவம், சுகாதாரம் முதலானவற்றுக்கான அரசு மான்யங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு விட்டன. மருத்துவத் துறைக்கான மானியங்கள் வெட்டிச் சுருக்கப் பட்டதால் அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நம்பிக்கையை மக்கள் அறவே இழந்து விட்டனர். தனியார் மருத்துவ மனைகளும், மருத்துவ இன்சூரன்சுகளும் புற்றீசலாகப் பெருகி மக்கள் அதில் முதலீடு செய்து தமது மருத்துவச் செலவுகளை ஈடுகட்ட முயலுகின்றனர்.

ஐந்து அமெரிக்கக் குழந்தைகளில் ஒவ்வொரு குழந்தையும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவை. இதனால் சராசரியாக 25% குழந்தைகள் பள்ளிப் படிப்பைக்கூட தொடர முடியாமல் பாதியிலேயே விலகி விடுகின்றனர் என்று கல்வியாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

அமெரிக்காவை அச்சுறுத்தும் போதை மருந்து அபாயத்தை ஒழிப்பதே எனது குறிக்கோள் என்று அறிவித்து ஆட்சிக்கு வந்த புஷ், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக கடந்த காலத்தைவிட போதை மருந்து ஒழிப்புக்கென ஒதுக்கப்பட்ட தொகையைக் குறைத்து விட்டார்.



வீடற்று தெருவில் வாழும் மூதாட்டியை வெளியேற்ற மிரட்டும் அமெரிக்க போலீசு.

ரூஸ்வெல்ட் பாணியில் வெற்றுச் சவடால் அடிப்பது பஷ்ஷின் வாடிக்கையாகிவிட்டது என்று அமெரிக்கப் பத்திரிக்கைகளே பரிகசிக்கின்றன.

### திவாலான பொருளாதாரம்

மக்களது அடிப்படைத் தேவைகளை அறவே புறக்கணிக்கும் புஷ் அரசு அதே சமயம் தனது ராணுவச் செலவுகளை அதிகரித்துக் கொண்டே போகிறது. பற்றாக்குறை நிலவினாலும் பாதுகாப்புச் செயலர் டிக்செனே, ரீகனின் நட்சத்திரப் போர் திட்டத்தை பகுதியளவாவது முன்னேற்றத் துடிக்கிறார். இதற்கு இந்த ஆண்டு மட்டும் 5,000 கோடி டாலர் தேவை. இது தவிர இதர போர்த்திட்டங்கள், உளவு பார்த்தல் முதலானவற்றுக்கான செலவுகளும் சேர்ந்து அமெரிக்க பொருளாதாரத்தை ராணுவ பொருளாதாரமாக மாற்றிவிட்டது. ''இத்தனைச் சுமையையும் இந்த ஓட்டைக் கப்பலால் தாங்க முடியாது. அமெரிக்கப் பொருளாதாரமே முழுகிப் போகும்'' என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே எச்சரிக்கின்றனர். பற்றாக்குறையை ஈடுகட்ட வழிதெரியாத ஏகாதிபத்தியவாதிகள் கத்தை கத்தையாக கரன்சி நோட்டுகளை அச்சிட்டு பணப் புழக்கத்தைப் பெருக்கி பிரச்சினையைத் தீர்த்துவிட முயலுகின்றனர். ஆனால் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக உற்பத்தித் தேக்கமும், பங்கு மார்க்கெட் சரிவும், பணவீக்கமும் பெருகி ஏகாதிபத்தியவாதிகளை அச்சுறுத்துகின்றன.

அமெரிக்காவின் பங்கு மார்க்கெட் சூதாட்ட மையமான ''வால்'' தெரு அக்டோபர் 13ந் தேதியன்று பீதியில் உறைந்தது. அன்று திடீரென சந்தை மதிப்பு 190 புள்ளியாக வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க வரலாற்றிலேயே இது இரண்டாவது முறையாக நடைபெறும் மாபெரும் சரிவு. அடுத்துவரும் ஆண்டும் இது மேலும் சரியும் என மதிப்பிடப்படுகிறது. பங்குச் சந்தைச் சரிவைத் தொடர்ந்து நுகர்பொருள் விற்பனை மட்டும் 40% குறைந்தது. 83.5% திறனுடன் இயங்கிய ஆலைகள் திடீரென தமது உற்பத்தித் திறனை 75% ஆக குறைத்து விட்டன. கார் விற்பனை கடந்த ஆண்டைவிட 17.5% குறைந்துவிட்டது. திடீரென 10% விலையேற்றம் ஏற்பட்டது. அச்சுறுத்தும் இந்நெருக்கடிகளால் பொருளாதார வளர்ச்சி வெறும் 1.5% ஆக ஆமை வேகத்தில் தான் நகரும் என்று பொருளாதாரவாதிகள் மதிப்பிடுகின்றனர். ''இது இரண்டாவது மாரடைப்பு; மூன்றாவது முறை நிகழ்ந்தால் உயிர் பிழைக்க முடியாது'' என்று பீதியுடன் கூறுகிறார் ஒரு தொழிலதிபர். ''அமெரிக்க அரசு செத்துவிட்டதா?'' என்று கேள்வியுடன் அதன் பொருளாதார திவால் நிலையை பிரபல 'டைம்' பத்திரிக்கையே படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்த நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கம்யூனிசத் தளையிலிருந்து விடுபட்டு ஜனநாயகப் பாதையில் முன்னேற அமெரிக்கா 'உதவ' வேண்டிய புதிய சுமையும் சேர்ந்துவிட்டது. குறிப்பாக போலந்து ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு மட்டும் 500 கோடி டாலர் 'உதவ' வேண்டியுள்ளது. இதுவும் போதென்று இப்போது கி.ஜெர்மனிக்கும் 'உதவ' வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் கையிலோ நிதியில்லை. எனவேதான், கிழக்கு ஐரோப்பாவில் ஏற்படும் மாற்றங்களை நிதானத்துடன் அணுக வேண்டும் என்று ஏகாதிபத்தியவாதிகள் அடக்கி வாசிக்கின்றனர்.

பற்றாக்குறை புற்றுநோய் தாக்கி மரணப் படுக்கையில் வீழ்ந்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் அதிலிருந்து மீள்வதற்காக ரஷிய வல்லரசுடன் அவசரமாக ஆயுத குறைப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறது. ஆனால் இதையே உலக சமாதானத்துக்காக ரஷிய - அமெரிக்க வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு பாடுபடுவதாக ஏகாதிபத்திய எடுபிடிகள் நம்பச் சொல்கின்றனர்.

ஏகாதிபத்திய தாசர்கள் கதைப்பது போல, கேடுகெட்ட கிழக்கு ஐரோப்பிய போலி கம்யூனிச ஆட்சிக்கு, முதலாளித்துவ ஜனநாயகம் மாற்றுத்தீர்வாகிவிட முடியாது. போலிக் கம்யூனிச நாடுகளை விட ஏகாதிபத்திய நாடுகளைத் தான் வறுமையும், பற்றாக் குறையும் பயங்கரவாதமும் பிடித்தாட்டுகின்றன. இவ்விரண்டு மக்கள் விரோத, ஜனநாயக விரோத அரசியல் கட்டமைப்புகளைத் தூக்கியெறியும் சோசலிச ஆட்சிமுறை மட்டும் தான் மக்களுக்கு உண்மையான ஜனநாயகத்தையும் நல்வாழ்வையும் சாதிக்கும். கானல் நீரை நம்பி ஓடும் கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாட்டு மக்களும், ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பாட்டாளி மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் விரைவில் இதை உணர்வார்கள். கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிஸ்டுகள் இன்று வீழ்ச்சி அடைவதைப் போலவே, மரணப் படுக்கையில் கிடக்கும் ஏகாதிபத்தியவாதிகளும் தாங்களே வெட்டிய சவக்குழிக்குள் விரைவில் வீழ்வார்கள்.

● — மனோகரன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, என்.டி.ஆர். முகந்தெரியாத ஒரு குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறார்! யார் பெற்ற குழந்தையோ! ஒரு முதன் மந்திரியிடம் (முன்னாள்) முத்தம் பெறுவது எல்லோருக்கும் கிடைக்குமா? கூட்டத்தினர் சிலிர்த்து போகிறார்கள்! விவரம் தெரியாதவர்கள் அரசியல்வாதியின் தாயுள்ளத்தைக் கண்டு பாராட்டுகிறார்கள். விவரம் தெரிந்தவர்கள் சிறிதாக ஒரு நமட்டு சிரிப்புடன் நிறுத்திக் கொள்கிறார்கள். தேர்தல் நேரத்தில் இந்த கண் கொள்ளாக் காட்சியை ஏராளமாக பார்க்கலாம்.

பல்லுப்போன பாட்டியை நெஞ்சோடு ஆரத்தழுவிக் கொள்ளும் அரசியல் தலைவர்கள்; மேடைக்கு தூக்கிவரும் குழந்தைகளுக்கு பிரதம மந்திரி, முதன் மந்திரி போன்ற பெரும் பதவிகள் வகித்த பெருந்தலைவர்களின் பெயர்களை சூட்டி பெற்றோர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் அரசியல் தலைவர்கள்; செலவு இல்லாமல் மக்களை நெகிழ வைக்கும், ஈர்க்கும் இந்த விளம்பர உத்தியை கண்டுபிடித்த பெருமை நேரு மாமாவை சேரும். நேரு கூட்டங்களில் ஒருசில குழந்தைகளிடம் குழைந்து பிறகு இந்திய குழந்தைகளுக்கு மாமா ஆன உத்தியை பிற ஓட்டுசீட்டு தலைவர்கள் அப்படியே வரித்துக் கொண்டார்கள். குறிப்பாக, தென்நாட்டு திராவிட கட்சி தலைவர்கள் அதை மேலும் விரிவுபடுத்தி ஆழமாக்கினார்கள்.

இதோ, இக் குழந்தையைப் பாருங்கள்! இக்குழந்தையும் ஒரு இந்திய நாட்டு பிரஜைதான். உடம்பெல்லாம் ஈக்கள் மொய்க்க, வெற்று வட்டிலை நீட்டி என்னமோ சொல்கிறானே! ''சோறா இது? வேண்டாம் போ'' என்கிறானா? ''இன்னும் கொஞ்சம் போடு'' என்கிறானா? வார்த்தைகளால் விவரிக்க முடியாத இம்மழலையின் வேதனைக்கு யார் பொறுப்பு? 'ஒன்றுக்கு மேல் வேண்டாம் என்று சொன்னோமே கேட்டார்களா?' என்று வக்கிரமாக நையாண்டி செய்கிறது அரசும், அதன் பிரச்சார சாதனங்களும். ஆனால், சின்ன வீடு, பெரிய வீடு என்று பல வீடுகளில் உருவாகும் ஆளுங்கும்பலின் புத்திரர்கள் குப்பை மேடுகளிலா திரிகிறார்கள்? குபேரர்களாகத் தானே வாழ்கிறார்கள்! உழைப்பாளியின் கடைசி சொட்டு ரத்தத்தையும் உறிஞ்சி அவனையும், அவனது பரம்பரையையும் ஓட்டாண்டியாக்குகிறது ஆளுங்கும்பல். அதை மறைக்க குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, முட்டை, வைட்டமின் மாத்திரை என்ற பிச்சை போடுகிறது அரசு.

வெட்கங்கெட்ட ஆட்சியாளர்கள்; குழந்தைகள் தினத்தைக் கொண்டாட ஆண்டுதோறும் பலகோடி ரூபாய் விரயம் செய்வது, மேடைகளில் கரிசனம் காட்டுவது ஒருபுறம். கோடிக்கணக்கான உழைப்பாளியின் குழந்தைகள் கூழுக்கும், சட்டைக்கும், படிப்புக்கும் ஏங்கித் தவிப்பது மறுபுறம். நம் மழலைகளுக்கு இழைக்கப்படும் இந்த அவமானத்தை நாம் துடைத்தெறிவது எப்போது?



படிப்பகம்